வெளியீடு: 25-3-2004 Issued: 25-3-2004

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வெள்ளிக்கிழமை, பிப்ரவரி 13, 2004–தொகுதி 57–எண் 3**

**Friday, the 13th February, 2004 – Volume 57 – No. 3**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

[Legislat]ive Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

318/2004

**13-02-2004**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 139-189 |
| **2. கவன ஈர்ப்பு—** | |
| கன்னியாகுமரி மாவட்டம், மணக்குடி கிராமம், கடலில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் காணாமல் போனது | 189-193 |
| **3. அறிக்கைகள் அளித்தல்—** | |
| (அ) பொதுக் கணக்குக் குழு | 193 |
| (ஆ) பொது நிறுவனங்கள் குழு | 193 |
| (இ) அரசு உறுதிமொழிக் குழு | 193 - 194 |
| **4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | |
| (அ) தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புத் திருத்தச் சட்டமுன்வடிவு, 2004 | 194 - 195 |
| (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2004 | 206 - 207 |
| **5. இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 2003-2004, அளித்தல்—** | 195 - 201 |
| மாண்புமிகு திரு. சி. பொன்னையன் | 195 - 201 |

| | பக்கங்கள் |
|---|---|
| **6. அறிவிப்புகள்—** | |
| (அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், *2003—2004,* மொழிதல் (ஆ.செ.) | 201 - 202 |
| (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, *2004* (ஆ.இ.) | 206 |
| **7. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2003–2004, வாக்கெடுப்பு—** | 202 - 206 |
| மாண்புமிகு திரு. சி. பொன்னையன் | 202 - 206 |
| **8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—** | |
| (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னனி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, *2004,* | 207 - 209 |
| மாண்புமிகு திரு. சி. பொன்னையன் | 208, 209 |
| (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, *2004* | 210 - 212 |
| மாண்புமிகு திரு. சி. பொன்னையன் | 210, 211 |
| (இ) தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புத் திருத்தச் சட்டமுன்வடிவு, *2004* | 212 - 214 |
| மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் | 212, 213 |
| (ஈ) குற்ற வழக்கு விசாரணை முறை (தமிழ்நாடு இரண்டாம் திருத்தத்) தொகுப்புச் சட்டமுன்வடிவு, *2002* | 214 - 215 |
| மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் | 214, 215 |





| | பக்கங்கள் |
|---|---|
| **8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—** தொடர்ச்சி | |
| (உ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, *2003* | 215 - 219 |
| மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி | 215 - 219 |
| (ஊ) தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருட்களைக் கொண்டு வருவதன் மீதான வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, *2003* | 219 - 223 |
| மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி | 219 - 222 |
| **9. அரசினர் தீர்மானங்கள்—** | |
| (அ) விதிகள் *30, 130* மற்றும் *132* ஆகியவற்றைத் தளர்த்தல் | 209 - 210 |
| (ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல் | 223 - 224 |
| **10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** | 224 - 226 |


17 ... 2004

D
V211,31'4?04
P04.57.3

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## மாசி 1, சுபானு—திருவள்ளுவர் ஆண்டு 2035

## 2004 பிப்ரவரி 13, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல்"

செயலாற்றல் பற்றிய நூலறிவைப் பெற்றிருந்தாலும் உலக நடைமுறைகளை உணர்ந்து பார்த்தே அதற்கேற்றவாறு அச்செயல்களை நிறைவேற்ற வேண்டும்.

## 1. வினாக்கள் - விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள். வினா எண் 61, திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**61—**

### குளம் தூர் வாருதல்

***18736—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, கப்பியறை பேரூராட்சியில் புலிமுகத்தான் குளத்தை தூர் வாரி மராமத்து செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அரசு விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளுமா?

[2004 பிப்ரவரி 13

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். பரிசீலனையில் உள்ளது.

**திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் மேற்கொள்ளப்படும் என்று பதிலளித்துள்ளதால், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு எனது தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய காலத்திலே ஒரு மறுமலர்ச்சி ஏற்படுகின்ற விதத்திலே குளங்கள் எல்லாம் தூர் வாரப்பட்டு, மழைநீரினுடைய கொள்ளளவை அதிகப்படுத்தியிருக்கிற அரிய திட்டத்தை நான் பாராட்டுகிற அதே நேரத்தில், கழிந்த ஆண்டு அதிகமான பணிகள் மாநிலம் முழுவதும் நடைபெற்றிருக்கின்றன. என்னுடைய மாவட்டத்திலும் நடைபெற்றிருக்கிறது; குறிப்பாக என்னுடைய தொகுதியிலும் கிட்டத்தட்ட 50 இலட்சம் ரூபாய்க்கு குளங்கள் தூர் வாருகின்ற பணிகள் நடைபெற்றிருக்கின்றன. இன்னும் அதிகமான குளங்கள் அந்தப் பகுதியிலே தூர் வாரப்பட வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்ற காரணத்தால், அம்மா அவர்கள் அறிவித்திருக்கிற திட்டத்தின்படி இந்த ஆண்டு அதிகமான நீர் கொள்ளளவு கொள்ளக்கூடிய குளங்களை தூர் வாரி, சுத்தப்படுத்தி, அதிகமான நீர் கொள்ளளவு கொள்கின்ற விதத்திலே எத்தனை கோடி ரூபாய் எங்களுடைய மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது? அதிகமான குளங்கள் தூர் வாரப்படுமா என்பதையும் உங்கள் மூலம் நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் நிதியாண்டில் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால், கடந்த ஆண்டைப்போல, இவ்வாண்டிலும் வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் குளங்களை எல்லாம் தூர் வாருவதற்கும் வரத்து வாய்க்கால்களை செப்பனிடுவதற்கும் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்கள் பகுதியிலே [illegible] வேண்டுமென்று கோரிக்கை

226058



2004 பிப்ரவரி 13]

விடுப்பாரேயானால், அந்தப் பணிக்கு முன்னுரிமை கொடுத்து, பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 62, திரு. இ.ஏ. லியாவுதீன் சேட், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**62—**

### பாலம் அமைத்தல்

**•30823—திரு. இ.ஏ. லியாவுதீன் சேட்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரவக்குறிச்சி தொகுதி, அரவக்குறிச்சி ஒன்றியத்திலுள்ள தாலுகா ஆபீஸ் பாலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இதுகுறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இ.ஏ. லியாவுதீன் சேட்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தாலுகா ஆபீஸ் பாலம் அமைந்துள்ள இடம் எனது அரவக்குறிச்சி தொகுதியின் தலைமையிடமான அரவக்குறிச்சி ஆகும். இப்பேரூராட்சியினர் தினமும் இப்பாலத்தின் வழியாகவே தேசிய நெடுஞ்சாலைக்கோ, பள்ளிக்கூடங்களுக்கோ, அரசு மருத்துவமனைக்கோ செல்ல வேண்டும். இத்தாலுகா ஆபீஸ் பாலம் அருகிலேயே வட்டாட்சியர் அலுவலகம், சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம், காவல் நிலையம், அரசு மருத்துவமனை முதலிய பல முக்கிய இடங்கள் அமைந்திருப்பதால், தினமும் இப்பாலத்தை பல நூற்றுக்கணக்கானோர் உபயோகப்படுத்துகின்றனர். சிறியதாக மழை

பெய்தால்கூட இப்பாலத்தை பயன்படுத்த முடியாமல், பள்ளிக் கூடங்களுக்கும், என்.எச்.7 வழியாக மாவட்டத் தலைநகரத்திற்குச் செல்வதற்கும் சுமார் 7 கி.மீ. சுற்றிச் செல்ல வேண்டிய மிகச் சிரமமான நிலையில் உள்ளது. பொது மக்கள் 7 கி.மீ. சுற்றி, மாற்று வழியில் சென்றாலும், தடாகோயில் பாலம் என்பதன் மூலம்தான் செல்ல வேண்டும். வேறு வழியே கிடையாது. ஆனால் இப்பாலமும் மழைக்காலத்தில் முழுவதுமாக மூழ்கிவிடும். போன ஆட்சியில் பொறுப்பிலிருந்த ஆட்சியாளர்களின் பொறுப்பில்லாத தன்மையால் எனது தொகுதி மக்கள் மழைக் காலங்களில் மட்டுமல்ல, மற்ற காலங்களில்கூட குண்டும் குழியுமான, மிகப் பழுதாகிப்போன இப்பாலத்தினால் பாடாய்ப்படுகின்றனர். தமிழகத்திலுள்ள மூலைமுடுக்குப் பகுதிகளுக்கெல்லாம் தண்ணீர் வசதி, மருத்துவ வசதி, போக்குவரத்து வசதி முதலிய அத்தியாவசியத் தேவைகளை, மற்ற நாட்டாரும் போற்றுகின்ற வகையில் நிறைவேற்றி வரும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு எனது தொகுதியின் நீண்ட நாள் கோரிக்கையான இப்பாலத்தை மிகவும் துரிதமான முறையில் அமைத்துத் தருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய மாவட்டச் சாலை என்ற வகைப்பாட்டில் வருகின்ற அரவக்குறிச்சி—குலவம்பாடி சாலை கி.மீ. 0/2-ல் உள்ள தாம்போகிக்குப் பதிலாக பாலம் அமைக்கப்பட வேண்டியதாகும். இச்சாலையில் கி.மீ. 0/2-ல் நங்காஞ்சியாறு குறுக்கிடுகிறது. இவ்வாற்றின் நீர்வழிப்பாதை 60 மீட்டர் இடைவெளி உடையதாகும். தற்போது 32 கண்கள் கொண்ட 64.80 மீட்டர் நீளம் கொண்ட குழாய் தரைமட்ட தாம்போகியாக உள்ளது. இந்தத் தாம்போகிக்குப் பதிலாக ஒரு கண் 10 மீட்டர் அளவு, ஆறு கண்கள் உடைய உயர்மட்டப் பாலம் கட்ட ரூபாய் 130 இலட்சம் தேவைப்படும். மழைக் காலங்களில் மிகுந்த வெள்ளம் வரும்போது பாலத்திற்கு மேலே சுமார் ஒரு மணி நேரம் தண்ணீர் செல்லக்கூடிய வாய்ப்பு இருப்பதால், வரும் நிதி ஆண்டில் பாலப் பணிகள் எடுத்துக்கொள்ளும்போது இப்பாலப் பணிக்கு முன்னுரிமை கொடுத்து ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





முற்பகல் 10-05

**திரு. இ.ஏ. லியாவுதீன் சேட்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 63, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**63—**

**சூரிய ஒளி மின் சக்தி**

***21561—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின் சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூரிய ஒளி மின் சக்தி மூலம் தெரு மின் விளக்குகள் எரிய வைக்க சிறப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்த அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். மத்திய அரசின் மரபுசாரா எரிசக்தி அமைச்சகத்தின் நிதியுதவியுடன் தமிழ்நாட்டில் சூரிய ஒளி தெரு விளக்கு அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) மத்திய அரசின் மரபுசாரா எரிசக்தி அமைச்சகம் 2002-2003 ஆம் ஆண்டில் சூரிய ஒளி மின் விளக்குத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிற்கு முதல் கட்டமாக 200 சூரிய ஒளி தெரு விளக்குகள் ஒதுக்கீடு செய்தது. பின்பு கூடுதலாக 200 சூரிய ஒளி தெரு விளக்குகள் ஒதுக்கீடு செய்து ஆக மொத்தம் 400 சூரிய ஒளி தெரு விளக்குகள் அமைப்பதற்கு விளக்கு ஒன்றிற்கு ரூ. 11,000 வீதம் மானியமாக வழங்க

அனுமதித்துள்ளது. இந்தத் தெரு விளக்குகளை வணிக ரீதியில் அல்லாத உள்ளாட்சி அமைப்புகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் பழங்குடியினர் பள்ளிகள் ஆகிய நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்து அங்கீகரிக்கப்பட்ட தயாரிப்பாளர்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 64, திரு. சி. இராசேந்திரன், மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**64—**

## துணை மின் நிலையம்

***39031—திரு. சி. இராசேந்திரன்:**

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவோணம் ஒன்றியம், ஊரணிபுரத்தில் உள்ள 33 கி.வா. துணை மின் நிலையத்தை 130 கி.வா. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவோணம் ஒன்றியம், ஊரணிபுரம் 33/11 கி.வா. துணை மின் நிலையத்தினைத் தரம் உயர்த்தும் திட்டம் தற்போது இல்லை என தமிழ்நாடு மின்வாரியம் தெரிவித்துள்ளது.

**திரு. சி. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவோணம் ஒன்றியம், ஊரணிபுரத்தில் 33 கி.வா. உள்ள துணை மின் நிலையத்தைத் தரம் உயர்த்தித்தர வேண்டும் என்று இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசை வேண்டிக்கொள்கிறேன் அந்தத் துணை மின் நிலையத்தில் 6000 மின் இணைப்புகள் உள்ளன. அதில் 1,500 மின் இணைப்புகள் விவசாயத்திற்காகப் பயன்படுகின்றன; 14 ஊராட்சிகளை உள்ளடக்கியது இந்தத் துணை மின் நிலையம். அதற்குப் பெரும்பாலும் பட்டுக்கோட்டை





மின் நிலையத்திலிருந்துதான் மின்சாரம் வருகின்றது. இன்றைய சூழ்நிலையில் மின் தட்டுப்பாடு இல்லாமல் தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்று இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சூளுரைத்து ஆட்சி செய்கின்றபோது, அந்தப் பகுதியில் இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுடைய எண்ணங்களைப் பூர்த்தி செய்கின்ற முகத்தான், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இந்த ஆண்டில் இல்லையென்றாலும் வருகிற ஆண்டிலாவது அதைத் தரம் உயர்த்தித்தர வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். திருவோணம் ஒன்றியத்திலே பின்னையூரில் ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. அது எந்த நிலையில் உள்ளது என்பதையும், தஞ்சை ஒன்றியம் துறையூரில் இருக்கின்ற துணை மின் நிலையத்திற்கு அனுமதி வழங்கியும், இடத்தைப் பெறுவதில் இடர்பாடுகள் இருக்கின்றன. அது பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடம் என்று சொல்லப்படுகிறது. அந்த இடத்தைப் பெற்று, அந்தத் துணை மின் நிலையம் எப்போது தொடங்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்தக் கோரிக்கையினை கருத்தினை கவனத்தில் கொண்டுதான் 24-9-2003 அன்று முதல், ஊரணிபுரத்திலுள்ள 33/11 கிலோ வாட் துணை மின் நிலையத்தின் மின்மாற்றியின் திறன் 1X 5 எம்.வி.ஏ.விலிருந்து 1X8 எம்.வி.ஏ.வாக அதிகரிக்கப்பட்டு, புதிய மின்மாற்றியுடன் செயல்பட்டு வருகின்றது. எனவே வருங்காலத்தில் அப்பகுதியில் ஏற்படும் மின் பளுவைக் கருத்தில் கொண்டு தரம் உயர்த்துவதற்கான தேவை ஏற்பட்டால் நிச்சயம் அதுபற்றி தமிழ்நாடு மின் வாரியம் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தஞ்சாவூர் ஒன்றியத்திலே புதிய துணை மின் நிலையம் அமைக்க அனுமதி கேட்டிருந்தார்கள். அதேபோல ஒரத்தநாடு ஒன்றியம் கார்காட்டுப்பட்டியிலே புதிய துணை மின் நிலையமும், திருவோணம் ஒன்றியத்தில் பின்னையூரிலே புதிய துணை மின் நிலையமும் தஞ்சாவூர் ஒன்றியம் விழாவூர் உள்ளாட்சிப் பகுதியிலே புதிய துணை மின் நிலையமும் அமைக்கப்பட உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற கருத்தைச் சொன்னார்கள். இந்த ஐந்து கோரிக்கைகளையும் ஆய்வு செய்து

உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் ஓராண்டில் 60 துணை மின் நிலையங்கள் அறிவிக்கப்பட்டு, அதிலே என்னுடைய வரகூர் தொகுதியில் துங்கபுரம் பகுதியிலே ஒரு துணை மின் நிலையம் அமைக்க அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். அரசு மூலமாக அதற்குத் தொகையும் வழங்கப்பட்டுவிட்டது. ஏதோ ஒரு காலத்திலே ஆண்டிகள் போய் அந்த இடத்திலே ஏதோ சாப்பிட்டிருப்பார்கள் போல இருக்கிறது. அதனால் ஆண்டிக்குட்டை என்று சொல்லி அதை நீர்ப்பிடிப்புப் பகுதி என்று சொன்னதாலே அதை எடுக்கக் கூடாது என்று அரசு மூலமாக சொன்னதாகக் கேள்விப்பட்டு அங்கிருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர்—அது மாதிரி குட்டையும் இல்லை; ஆண்டி போகிற வழியிலே அந்த இடத்திலே உட்கார்ந்து பேசி இருப்பார்கள், அதை வைத்து ஆண்டிக்குட்டை என்று பெயர் வந்துவிட்டது—தற்போது குட்டையும் இல்லை நீர்ப்பிடிப்பும் இல்லை என்று அரசுக்குப் பரிந்துரை கொடுத்திருக்கிறார். அதைக் கருத்திலே கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்த இடத்திற்கு ஆணை கிடைக்க ஆவன செய்வாரா என்று உங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் பளுவைக் கருத்தில் கொண்டுதான் துணை மின் நிலையம் அமைக்கப்படுகிறது. எனவே நம்முடைய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் மின் பளு அங்கிருக்கின்ற நிலையில் நிச்சயமாகத் துணை மின் நிலையம் அமைக்கப்படுவதில் எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் இல்லை. ஆனால் அதேநேரத்தில் இடம் என்பது மிக, மிகப் பிரச்சினையாக இருக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே நிலவுடமை உரிமை மாற்றம் செய்து கொடுக்கும்பட்சத்தில் மின்சார வாரியத்திற்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. எனவே தற்போது ஒரு முன்னேற்றமாக மாவட்ட ஆட்சித் தலைவரே இதைப்



பரிந்துரை செய்துள்ளார், நிலவுடமை உரிமை மாற்றம் மின்சார வாரியத்திற்குச் செய்யப்படுமென்று. எனவே அது உண்மையாக இருக்கின்றபட்சத்தில் நிச்சயமாக உடனடியாக அந்த இடத்தில் துணை மின் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். அப்படி நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அதிலே நிலவுடமை உரிமை மாற்றம் குறித்து சில condition-கள் போட்டால் அதற்கு நம்முடைய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் extension work-ஆக இருப்பதால் அவரோடு பேசலாம். நம்முடைய மின் வாரியம்கூட மாவட்ட ஆட்சித் தலைவரோடு பேசும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. நடராஜன்.

**திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் நிறைந்த நாகப்பட்டினம் மாவட்டத்தில் மயிலாடுதுறை கோட்டத்தில் அதிகமாக விவசாயப் பம்புசெட்டுகள் உள்ளதால் அடிக்கடி குறைந்த மின் அழுத்தம் ஏற்படுகிறது. எனவே அந்தக் குறையைப் போக்குவதற்கு அந்தப் பகுதியிலுள்ள அனைத்து மின் மாற்றிகளையும் 110 கே.வி.-ஆக தரம் உயர்த்திடவும் கூடுதல் மின்மாற்றிகள் அமைத்துத் தரவும் மாண்புமிகு அமைச்சர் முன்வருவாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்திலே low voltage என்ற பிரச்சினை இருந்தது. ஆனால் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்ற பிறகு இப்போதுதான் ஒரு Grid frequency 49.8, அது கண்டிப்பாக இருக்க வேண்டும் என்கிற வகையில் ஒரு Grid discipline maintain செய்யப்படுகிறது. Grid discipline என்றால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெளிவாகவே அவர்களுக்குப் புரிகின்ற வகையிலே சொல்கிறேன். ஒரு மூட்டையை, கிட்டத்தட்ட 49.8 கிலோ எடை கொண்ட அந்த மூட்டையை முதுகிலே தூக்கிக் கொண்டு ஓட வேண்டும். அது சரியாக இருந்தால்தான் அவர் வேகமாக அந்த சீரான நடைக்குச் செல்ல முடியம். அதிலே குறைந்தாலும்கூட அந்த ஓட்டம் குறையும்போது Grid collapse ஆகின்ற ஒரு நிலைமை இருக்கும். அதிகமானாலும்கூட வேகமாக ஓடுகின்ற நிலையிலே Grid collapse ஆகின்ற ஒரு சூழ்நிலை இருக்கும். எனவே தமிழ்நாடு முழுவதும் இந்த Grid discipline maintain செய்யப்படுகின்ற காரணத்தினால் இப்போது

low voltage pocket இல்லை என்கிற ஒரு நிலை இருக்கிறது. இருந்தாலும் ஒருசில இடங்களிலே இது போன்றவற்றை கவனத்திற்குக் கொண்டு வந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். அதேநேரத்திலே அங்கே உண்மையிலேயே மின்பளுவின் காரணமாக சில இடங்களிலே low voltage pocket இருந்தால் அந்த இடத்தைக்கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வரலாம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல அது உண்மையாக இருக்கும்பட்சத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 65, திரு. எம்.எஸ். சந்திரசேகரன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**65—**

## பக்தர்களுக்கு தங்கும் விடுதி

***33752—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், வள்ளிமலை அருள்மிகு ஸ்ரீசுப்பிரமணியசுவாமி ஆலயத்திற்கு வரும் பக்தர்களுக்குத் தங்கும் விடுதி வசதி செய்துதர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், வள்ளிமலை அருள்மிகு ஸ்ரீசுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் பெறப்படும் வருவாய் நிர்வாகச் செலவினங்களுக்கே போதுமானதாக உள்ளதால் தங்கும் விடுதி கட்ட நிதி வசதி தற்சமயம் இல்லை. நிதி வசதி பெருகிய பின்பு தங்கும் விடுதி கட்டுவதற்கு அரசு சிந்திக்கும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கின்றேன்.



முற்பகல் 10-15

**திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராணிப்பேட்டை தொகுதியில் உள்ள வள்ளிமலை அருள்மிகு ஸ்ரீசுப்பிரமணியசுவாமி ஆலயம் புகழ்பெற்ற ஸ்தலமாகும். ஸ்ரீமுருகப்பெருமான் வள்ளியை திருமணம் செய்த இடம் வள்ளிமலை ஆகும். ஆண்டுதோறும் பிப்ரவரி, மார்ச் மாதங்களில் 10 நாட்கள் உற்சவம் நடைபெறுகிறது. நான்கு நாட்கள் தேர்த் திருவிழா நடைபெறுகின்றது. அதில் நாளொன்றுக்கு சுமார் 50 ஆயிரம் மக்கள் கலந்துகொள்கின்றனர். நான்காவது நாள் தேர்த் திருவிழாவின்போது சுமார் 2 இலட்சம் மக்கள் கலந்துகொள்கின்றனர். அதோடுமட்டுமல்லாமல், ஏப்ரல் மாதத்தில் நடைபெறுகின்ற படி விழாவில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொள்கின்றனர். ஆடி கிருத்திகையின்போது 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் காவடி எடுக்கின்றார்கள். 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொள்கின்றனர். அதோடுமட்டுமல்லாமல் மாதந்தோறும் நடைபெறுகின்ற கிருத்திகையின்போது 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொள்கின்றனர். அதுபோல, ஆண்டுதோறும் வள்ளிமலை அருள்மிகு ஸ்ரீசுப்பிரமணியசுவாமி ஆலயம் 10 இலட்சத்திற்கு மேல் மக்கள் வந்து செல்கின்ற புனிதத் தலமாக விளங்குகின்றது. இங்கு பக்தர்கள் தங்குவதற்கு போதிய வசதி இல்லை. பக்தர்கள் தங்க வேண்டுமென்று சொன்னால், 30 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வேலூரில் தங்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. அல்லது 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இராணிப்பேட்டையில் தங்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. பக்தர்களின் நலன் கருதி இந்து சமய மற்றும் அறநிலையத் துறை மூலமாக பக்தர்க்ள் வள்ளிமலையில் தங்குவதற்கு விடுதி வசதி செய்து தர மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி திருக்கோயிலுக்கு 1.8 ஏக்கர் நஞ்சை நிலமும், 5.47 ஏக்கர் புஞ்சை நிலமும்தான் உள்ளன. அதன் மூலமாக வருகின்ற வருவாயை வைத்தும் நிரந்தர முதலீடாக ஆலயத்தில் 7 இலட்சத்து, ஆயிரத்து 521 ரூபாய் மட்டும் உள்ளது. இதன் மூலம் பெறப்படும் வட்டித் தொகை நிரந்தர வருவாயாக கருதப்படும் இனங்களாகும்.

[2004 பிப்ரவரி 13

இந்த நிலையில் மேற்படி திருக்கோயிலின் நிதி மூலம் தங்கும் விடுதி கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை. பக்தர்கள் வேண்டுமானால் இலட்சக்கணக்கில் வந்து கொண்டிருக்கலாம். ஆனால் இலட்சக்கணக்கான ரூபாய் வருவாய் வருமேயானால் உடனடியாக அங்கே கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதோடுமட்டுமல்லாமல் நெடுங்காலமாக பக்தர்கள் கோரிக்கை எழுப்பி வருகின்றனர் என்பதால் மேற்படி திருக்கோயிலில் தங்கும் விடுதி கட்டுவதற்கு மாவட்ட உள்ளாட்சி அமைப்பு நிதி மூலமோ அல்லது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நிதி வசதி ஏற்படுத்தித்தர முன்வந்தால் அவரது கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அனுமதி பெற்று தங்கும் விடுதி கட்டித்தர அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகழ்பெற்ற தலமாக இருக்கின்ற இந்த வள்ளிமலையை சுற்றுலாத்தலமாக மாற்றினால் நிறைந்த வருவாய் பெறுகின்ற சூழ்நிலை இருக்கும். அந்த வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வள்ளிமலையை சுற்றுலாத்தலமாக மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் கூட்டம் அதிகமாக ஆலயத்திற்கு வருகின்ற காரணத்தினால் மாண்புமிகு அம்மா அவர்களிடத்தில் அனுமதி பெற்று அதைச் சுற்றுலாத்தலமாக அமைப்பதற்கு வசதியிருக்குமானால் அரசு சிந்திக்கும் என்பதை தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஸ்ரீசுப்பிரமணியசுவாமி கோயிலில் நிதியாதாரங்கள் இல்லாத காரணத்தினால் வரும் பத்தர்களுக்கு தங்கும் விடுதி கட்ட இயலாது என்று சொல்லியிருக்கிறார். அப்படியென்றால், என்னுடைய மதுரை மாவட்டம் மேலூர் தொகுதியில் இருக்கின்ற கள்ளழகர் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு...



2004 பிப்ரவரி 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கெல்லாம் தனிக் கேள்வி போட வேண்டும். திரு. இரா. வில்வநாதன்.

**திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்திலே மிகவும் பிரசித்தி பெற்ற ஆலயம் சோளிங்கரிலே உள்ள லட்சுமி நரசிம்மசுவாமி கோயிலாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *66*, செல்வி சி. கனகதாரா, மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர்.

**66—**

### அரசு கலைக் கல்லூரி

***3664—செல்வி சி. கனகதாரா:**

மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரணாம்பட்டு ஒன்றியம், பேரணாம்பட்டு நகரில் அரசு கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு கலைக் கல்லூரிகள் அனைத்தும் அந்தந்தப் பகுதி பல்கலைக் கழகங்களில் உறுப்புக் கல்லூரிகளாக மாற்றப்பட்ட நிலையில் இனி கலைக் கல்லூரிகளை அரசு தொடங்க அதிக வாய்ப்பு இல்லை. தேவையின் அடிப்படையில் நிதிநிலைமைக்கேற்ப அந்தந்தப் பகுதிகளைச் சார்ந்த பல்கலைக்கழகங்களே புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் தொடங்கும். தற்போதுள்ள நிதி நெருக்கடியில் புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை பல்கலைக் கழகங்களாலும் தொடங்க இயலாது. எனவே பேரணாம்பட்டு நகரில் கலைக் கல்லூரியை அரசால் தற்போது அமைக்க இயலாது.

**செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூவுலகம் தமிழர் எல்லாம் போற்றுகின்ற தாயாகவும், தத்துவமாகவும், மகத்துவமாகவும், வித்தகமாகவும் விளங்குகின்ற எங்கள் கழகக் காவல் தெய்வத்தின் பாதங்களை வணங்கி என் வினாவைக் கேட்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரம் அடைந்து *50*

[2004 பிப்ரவரி 13

ஆண்டுகளுக்கு மேலாகியும் மிகவும் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் எங்கள் பேரணாம்பட்டு தொகுதியில் இதுவரை ஓர் அரசுக் கல்லூரியும் அமைக்கப்படவில்லை. வறுமையிலும் ஏழ்மையிலும் வாழும் குடும்பத்திலுள்ள ஆயிரக்கணக்கான மாணவ, மாணவிகள் பேரணாம்பட்டிலிருந்து வெகுதொலைவில் உள்ள வேலூர், குடியாத்தம், வாணியம்பாடி, திருப்பத்தூர் போன்ற ஊர்களுக்குச் சென்று படிக்க முடியாத பொருளாதார சூழ்நிலை உருவாகியுள்ளது. எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கின்ற மாண்புமிகு அம்மாவின் அரசு கருணையோடு மீண்டும் பரிசீலித்து பேரணாம்பட்டில் அரசுக் கலைக் கல்லூரி அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்து இருக்கிற வேலூர் மாவட்டத்தில் மட்டும் 3 அரசு கலைக் கல்லூரிகள், 7 உதவி பெறும் கலைக் கல்லூரிகள், 9 சுயநிதிக் கலைக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. அந்த வகையில் இப்போது அரசோ அல்லது பல்கலைக்கழகமோ புதிதாக கலைக் கல்லூரியை ஆரம்பிக்க முடியவில்லையென்று சொன்னாலும், அரசின் நிதியுதவியின்றி சுயநிதிக் கல்லூரிகளைத் திறப்பது குறித்து தனியார் முகமையிடமிருந்து விண்ணப்பங்கள் ஏதேனும் பெறப்பட்டால் இதுகுறித்து பரிசீலிக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழ்ந்து வருகிற பகுதி தங்களுடைய பகுதி என்று சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய தமிழக முதல்வர் இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பிலே இருக்கிற பெண்கள் பட்டப் படிப்பு படிக்க வேண்டும், முதுகலை பட்டப் படிப்பு படிக்க வேண்டும், படிப்பை பாதியிலே அவர்கள் நிறுத்திவிடக் கூடாது என்ற அந்த அடிப்படையில் பெண் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து பெண் கல்வியை ஊக்குவிப்பதன் வாயிலாக இன்றைக்கு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் பெண்களுக்காக முதுகலை பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வியை வழங்க வேண்டுமென்ற உத்தரவையிட்டு இன்றைக்கு இந்தியாவிலே மட்டுமல்ல, உலகத்திலேயே



2004 பிப்ரவரி 13]

உயர்நிலைக் கல்வியை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இலவசமாக வழங்குகிற மிகப்பெரிய ஒரு சாதனையை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிறைவேற்றிக் காட்டிக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப் புதிதாக கல்லூரிகள் ஆரம்பிக்கப்படவில்லையென்று சொன்னாலும், இருக்கிற கல்லூரிகளிலே புதிய பாடத் திட்டங்களை அதாவது வழக்கமாக இருந்து வருகிற traditional course-களைத் தவிர்த்து Job oriented course-களில் வேலைவாய்ப்பு அளிக்கும் பாடப் பிரிவுகளைத் துவக்க வேண்டுமென்று மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டதன் பேரில் இன்றைக்கு 67 பல்கலைக் கழக உறுப்புக் கல்லூரிகளில் 28 உறுப்புக் கல்லூரிகளில் புதிதாக வேலைவாய்ப்பு அளிக்கின்ற பாடத் திட்டங்களை அமைத்த வகையில் 68 முதுகலை பட்டப் படிப்புகளையும் 41 இளங்கலை பட்டப் படிப்புகளையும் சுயநிதி அடிப்படையில் துவக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டு அந்தப் பாடப் பிரிவுகளில் இன்றைக்கு மாணவ, மாணவிகள் ஆர்வமாக சேர்ந்து வருகிற சூழ்நிலை இருக்கிறது. இந்தத் திட்டம் மாணவ, மாணவிகளிடம் அதிக வரவேற்பைப் பெற்றிருப்பதால் மற்ற கல்லூரிகளுக்கும் இந்தத் திட்டம் விரிவாக்கப்படவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களின் தன்னிகரற்றத் தலைவியாக விளங்குகிற மாண்புமிகு அம்மாவின் அரசு இந்த நிதி ஆண்டில் இல்லையென்றாலும் இனி வருகிற நிதி ஆண்டிலாவது எங்கள் தொகுதிக்கு கல்லூரி அமைத்துத்தர வேண்டுமென மீண்டும் வலியுறுத்தி என் சார்பாகவும், என் தொகுதி மக்களின் சார்பாகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். நன்றி!

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியைச் சார்ந்த பல்கலைக்கழகம் தேவையின் அடிப்படையில் இதைக் கருத்தில் கொள்ளும். அதேபோல நான் ஏற்கெனவே சொன்னதுபோல அரசின் நிதியுதவி இன்றி சுயநிதிக் கல்லூரிகளை அமைப்பதற்கு யாராவது தனியார் முன்வருவார்களேயானால் அவர்களுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்திரமோகன்.

[2004 பிப்ரவரி 13

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கலைக் கல்லூரி துவக்க போதிய நிதிவசதி இல்லை என்றாலும்கூட தனியார் சுயநிதிக் கல்லூரி ஆரம்பிக்க இந்த ஆண்டு அரசு அனுமதி அளிக்குமா எனவும், இந்த ஆண்டு தமிழகத்தில் எங்கெங்கு சுயநிதிக் கல்லூரிகள் தொடங்க அரசிடம் திட்டம் உள்ளது எனவும் அதிலும் குறிப்பாக சீர்காழி தொகுதியிலே சென்ற ஆண்டு தனியார் சுயநிதிக் கல்லூரிகளைத் தொடங்க விண்ணப்பம் கொடுத்திருந்தபோதிலும் இதுநாள் வரையில் சுயநிதிக் கல்லூரி தொடங்கப்படவில்லை. இந்த ஆண்டாவது சீர்காழி தொகுதியில் சுயநிதிக் கல்லூரி தொடங்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் சுயநிதிக் கல்லூரிகளை ஆரம்பிப்பதற்கு அரசு உத்தரவிடுவது ஒரு கொள்கை முடிவு. அந்த வகையிலே இந்த ஆண்டுவரை, கிட்டத்தட்ட 150 விண்ணப்பங்கள் தனியாரிடமிருந்து சுயநிதிக் கல்லூரிகளை ஆரம்பிப்பதற்கு வரப்பெற்றிருக்கின்றன. அந்த மனுக்கள் இப்போது அரசின் ஆய்வில் உள்ளன. எனவே அந்த ஆய்வு மேற்கொண்டு, கல்லூரிகளை ஆரம்பிப்பதற்கான அடிப்படை வசதிகள் அங்கே இருக்கின்றனவா என்பதை ஆய்வு செய்த பிறகு, எந்தெந்தப் பகுதிகளுக்கு கல்லூரிகள் தேவை என்று அரசு முடிவு எடுக்கிறதோ அந்தந்தப் பகுதிகளுக்கு சுயநிதிக் கல்லூரிகள் அமைப்பதற்கு தனியார்களுக்கு அரசு உத்தரவு வழங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய அரசு கலைக் கல்லூரிகள் தொடங்க முடியாத இடங்களில் அந்த இடத்தினுடைய தேவையைப் பூர்த்தி செய்வதற்காக 20 கிலோமீட்டருக்கு அருகாமையில் இருக்கக்கூடிய, ஏற்கெனவே உள்ள கல்லூரியினுடைய கிளையை அந்தப் பகுதியில் நிறுவுவதற்கு அரசு அனுமதி தருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2004 பிப்ரவரி 13]

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காகத்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திறந்த நிலை பல்கலைக்கழகம் என்ற அந்தப் பல்கலைக்கழகத்தைப் புதியதாக ஏற்படுத்தி, அந்தப் பல்கலைக்கழகத்தின் மூலமாக ஆங்காங்கே தேவைப்படுகிற இடத்திலே மையங்கள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்து, இப்போது பல மையங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அந்த வகையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னதைப்போல எந்தெந்தப் பகுதிகளுக்கு அதுபோன்ற மையங்கள் தேவைப்படுகிறதோ, அந்தந்த இடங்களிலே அப்படிப்பட்ட மையங்கள் நிச்சயமாக அமைத்துக் கொடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 67, செல்வி க. பாலபாரதி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**67—**

### மருத்துவமனைக்குப் புதிய கட்டடம்

**•18668—செல்வி க. பாலபாரதி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் அரசு மருத்துவமனை பழைய கட்டடத்தில் இயங்கி வருவதால், புதிய கட்டடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்ட செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 68, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

[2004 பிப்ரவரி 13

**68—**

**ஊட்டச்சத்து மையம்**

***16415—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் ஒன்றியம், லெவிஞ்சுபுரம் ஊராட்சி, ஜெயமாதாபுரம் கிராமத்தில் ஊட்டச்சத்து மையம் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்தக் கேள்வி மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் எழுப்பப்பட்டு, அனுமதிக்கப்பட்ட நேரத்தில் ஜெயமாதாபுரம் கிராமத்திலே மொத்த மக்கள்தொகை 236 பேர் மட்டுமே இருந்ததால், அங்கு ஊட்டச்சத்து மையம் இல்லாமல் இருந்தது. அருகில் உள்ள கூட்டப்புளி மையத்தின் மூலம் மேற்படி கிராம மக்கள் பயன் பெற்று வந்தார்கள். ஆனால் தற்போது அந்தக் கிராமத்தின் மக்கள்தொகை 958 ஆக உயர்ந்திருக்கிறது. மேலும் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்கள் தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப் பகுதிகளின்கீழ் திட்டச் செயல்பாடுகள் சென்றடையாத பகுதிகளில் புதிய அங்கன்வாடி மையம் தோற்றுவிக்க, தற்போது 4,297 அங்கன்வாடி மையங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டும் என்று ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த ஆணையின்படி திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஒன்றியத்தில் மட்டும் 72 புதிய மையங்கள் தொடங்கப்படவுள்ளன. இதில் ஜெயமாதாபுரம் கிராமத்திலும் புதிய ஊட்டச்சத்து மையம் தொடங்கப்படவுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய ஊட்டச்சத்து மையம் விரைவிலேயே திறக்க இருப்பதாகச் சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அரசு மாணவர்கள் விடுதியைச் சிறப்பாக அவர்கள் தங்குகின்ற வண்ணம் கட்டி முடித்துக்கொண்டிருக்கின்றார்கள். அதுபோல



2004 பிப்ரவரி 13]

தமிழகத்திலுள்ள ஊட்டச்சத்து, பாலர்வாடி ஆகிய மையங்களும், மிகவும் பழுதான நிலையில் இருக்கின்றன. ஆகவே அவற்றையும் அரசு மாணவர்கள் விடுதிகளைச் சிறப்பாகக் கட்டித் தந்ததைப் போன்று நம்முடைய மழலையர் பள்ளிகளையும் சிறப்பாகக் கட்டுவதற்கும், முதல் கட்டமாக அவற்றைச் சரி செய்வதற்கும் அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கன்வாடி மையங்கள், குழந்தைகள் பயிலுகின்ற சத்துணவு மையங்கள் ஆகியவற்றைப் பழுதுபார்ப்பதற்கு என்று மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்கள் 25 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்து, அதன் மூலம் பழுதுபார்க்கின்ற பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன; பல இடங்களில் முடிக்கப்பட்டிருக்கின்றன. புதியதாக அங்கன்வாடி மையங்கள் கட்டப்பட வேண்டுமென்றால் 1,25,000 ரூபாய் அரசாங்கத்தின் மூலமாக அனுமதிக்கப்பட்டு—இதிலே மத்திய அரசின் பங்கு 75 விழுக்காடு, மாநில அரசின் பங்கு 25 விழுக்காடு—எல்லாவற்றுக்கும் மேலாக அருகிலே இருக்கிற தொண்டு நிறுவனங்கள், மக்கள் பிரதிநிதிகளின் பங்கேற்போடு பல அங்கன்வாடி மையக் கட்டடங்கள் பழுது பார்க்கப்பட்டு மிகச் சிறப்பான முறையிலே நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கட்டடம் கட்டுவதற்கு மத்திய அரசு 75 விழுக்காடு, தமிழக அரசு 25 விழுக்காடு என்பதாக கட்டுவதற்கு விதி இருக்கிறது என்று சொன்னீர்கள். தமிழக அரசின் நிதி குறைவாக இருந்தால் சட்டமன்ற உறுப்பினருடைய நிதியில் இருந்தாவது கட்ட, மிக முக்கியமான இடங்களில், மிக மோசமான நிலையில் இருப்பவற்றுக்கு புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் என்னுடைய பதிலிலே குறிப்பிட்டேன். சட்டமன்ற உறுப்பினர்கள் அவரவர் விருப்பத்தின்படி அந்தந்தப் பகுதிகளிலே இருக்கக்கூடிய குழந்தைகளின் நலனைக் கருத்திலே வைத்துக்கொண்டு தாங்களே கட்டித் தருவதற்கு முன்வரலாம்.

[2004 பிப்ரவரி 13

இல்லையென்றால் அருகிலே இருக்கிற தொண்டு நிறுவனங்கள், அந்தந்த மாவட்டங்களில் இருக்கக்கூடிய தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளோடு தொடர்புகொண்டு அவர்களின் மூலமாகவும் கட்டித் தருவதற்கு முயற்சி செய்யலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். ராஜம்மாள்.

**திருமதி எஸ். ராஜம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியிலே ஊட்டச்சத்து மையங்களானது நல்ல முறையிலே செயல்பட்டுக்கொண்டு வருகின்றன. அனைத்து இடங்களிலும் செயல்பட்டு வந்தாலும் அங்கே வேலை செய்வதற்குச் சரியான ஆட்கள் இன்னும் போடப்படவில்லை. அதற்குரிய list கேட்டார்கள். அதையும் கொடுத்தோம் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில். ஆகவே எப்போது அவர்களை வேலைக்குப் போடுவார்கள் என்பதை அமைச்சர் அவர்களிடமிருந்து தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊட்டச்சத்து மையங்களில் இருக்கின்ற, ஏற்கெனவே விடுவிக்கப்பட்டிருக்கின்ற உபரிப் பணியாளர்கள் காலிப் பணியிடங்களில் நிரப்பப்பட வேண்டுமென்று அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த அரசு ஆணையின்படி காலிப் பணியிடங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகத் தெரிவிக்கிறபோது உடனடியாக அந்த காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சக்திவேல் முருகன்.

**திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள், அம்மா அவர்களால் புதிதாக ஊட்டச்சத்து மையங்கள் அமைக்கப்படுவதாகச் சொன்னார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் என்னுடைய அம்பாசமுத்திரம் தொகுதி, கடையம் ஒன்றியம், சேர்வாரப்பட்டியைச் சேர்ந்த அங்கபுரத்தில் ஊட்டச்சத்து மையம் வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருந்தேன். அமைச்சர் அவர்கள் அந்தப் பட்டியலில் அதை இணைத்து இந்த ஆண்டு அங்கே அமைக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.



2004 பிப்ரவரி 13]

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களால் அனுமதிக்கப்பட்டிருக்கிற, 4,297 மையங்களும், தமிழ்நாடு ஆணை வெளியிடப்பட்டிருக்கிற கோரிக்கைகளின் அடிப்படையில் பிரித்துக் முழுவதும் வந்திருக்கின்ற கோரிக்கைகளின் அடிப்படையில் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய அத்தனை மாவட்டங்களிலேயும் இந்த அங்கன்வாடி மையங்கள் திறக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அம்பாசமுத்திரம் பகுதியிலே எவ்வளவு மையங்கள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன என்பது குறித்து தனிக் கேள்வி போட்டால் விவரமாகத் தெரிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துகொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 69, திரு. லா. சந்தானம், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**69—**

## சத்துணவு மையம்

***20938—திரு. லா. சந்தானம் :**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், கருமாத்தூர் பஞ்சாயத்து, புலித்தேவன்பட்டியில் இயங்கிவரும் புனித கிளாரட் ஆரம்பப் பள்ளிக்கு சத்துணவு மையம் ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இக்கேள்வி அனுமதிக்கப்பட்ட நேரத்தில் மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், கருமாத்தூர் பஞ்சாயத்து, புலித்தேவன்பட்டியில் இயங்கிவரும் புனித கிளாரட் ஆரம்பப் பள்ளியில் சத்துணவு மையம் ஏற்படுத்தப்படாமல் இருந்தது. பின்னர் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் கவனத்திற்குக் கோரிக்கைகள் வந்ததற்குப் பிறகு அம்மா அவர்களின் ஆணையின்படி 01-04-2003 முதல் இப்பள்ளியில் பயிலும்

[2004 பிப்ரவரி 13

475 மாணவர்களுக்கென புதிய சத்துணவு மையம் தொடங்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பதில் மிகவும் சரியான ஒன்றே. இது சென்ற ஆண்டு விடுக்கப்பட்ட வினா. அது பூர்த்தி செய்யப்பட்டிருக்கிறது. அதோடு இன்றைக்கு சத்துணவு மையங்கள், பால்வாடி மையங்களிலே பல்வேறு இடங்களிலே அமைப்பாளர்கள் இல்லை என்கிற நிலை இருக்கிறது. அந்த மையங்களுக்கெல்லாம் புதிதாக அமைப்பாளர்களை வேலையில் அமர்த்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கேள்வியிலேகூட இதற்கான பதிலை நான் குறிப்பிட்டேன். காத்திருப்போர் பட்டியலில் இருக்கின்ற உபரிப் பணியாளர்களைத்தான் சத்துணவு மையங்களிலே காலிப் பணியிடங்கள் வருகின்றபோது நிரப்பட வேண்டும் என்பது அரசாணை. அந்த அரசாணையின்படி தகுதிபெற்றவர்களை நியமிப்பதற்காக இரண்டு சத்துணவு மையங்களிலே இருப்பவர்கள் காலிப்பணியிடங்களை குறிப்பிடவேண்டும். ஊட்டச்சத்துப் பணியாளர்கள் காத்திருப்போர் பட்டியலில் தகுதியானவர்கள் இருக்கிறார்களா? அவர்கள் ஆசிரியர் பணிக்குத் தகுதியானவர்களா அல்லது சமையலர் வேலைக்குத் தகுதியானவர்களா அல்லது உதவியாளர் வேலைக்குத் தகுதியானவர்களா என்பதைக் கண்டறிந்து மாவட்ட ஆட்சித் தலைவரின் கவனத்திற்குப் ,போகிறபோது உடனடியாக நிரப்பப்படுகிறார்கள். தகுதிப்பட்டியல் காரணமாக காலதாமதம் ஏற்பட்டிருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கோரிக்கையைத் தருவார்களேயானால், எந்தப் பகுதியிலே காலியிருக்கிறது என்று சொல்வார்களேயானால் மாவட்ட ஆட்சித் தலைவரோடு பேசி உடனடியாக நிரப்பப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



2004 பிப்ரவரி 13]

*முற்பகல் 10—35*

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே ஊட்டச்சத்து மையத்திலே பணியாற்றுபவர்கள் எல்லாம் பணியிலே அமர்த்தப்பட்டுவிட்டார்கள். அப்படி அமர்த்தப்பட்ட நிலையிலும் பல்வேறு இடங்களிலே காலியிடங்கள் இருக்கின்றன. அதை நிரப்ப வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. அப்படி அந்த காலியிடங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக கூறுகின்ற நேரத்திலே அரசு அவற்றை நிரப்பித் தருவதற்கு முன்வருமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதியானவர்களை நியமிக்கவேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அவர்களை அனுப்புகிறபோது தங்களுடைய சொந்த ஊருக்குப் பக்கத்திலேயே மையம் இருக்கவேண்டுமென்று பலபேர் விரும்புகின்ற காரணத்தால் காலிப் பணியிடங்கள் இருக்கக்கூடிய ஊர்களுக்கு உத்தரவு போடுகிறபோது அவர்கள் அங்கு வேலையிலே சேருவதற்கு கொஞ்சம் காலதாமதம் செய்கிறார்கள். ஆகவே அவர்களிடத்திலே ஒப்புதல் பெற்றபிறகு யார் அந்த கிராமத்திலே வேலை செய்ய முடியும் என்று ஒப்புதல் பெற்றதற்குப் பிறகு நாம் அங்கே வேலைக்கான உத்தரவை தரக்கூடிய வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால் காலதாமதம் ஏற்படுகிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்றபடி யார் எந்தெந்தப் பகுதிகளிலே காலியிடங்களுக்குச் செல்ல விரும்புகிறார்களோ அவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த ஆட்சிகாலத்தில்தான் S.S.A. திட்டத்தின் மூலமாக ஏராளமான ஆரம்பப் பள்ளிகள் துவங்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பள்ளிகளிலே பயிலுகின்ற மாணவர்களுக்கெல்லாம் சத்துணவை அருகாமையில் இருக்கக்கூடிய பழைய பள்ளிகளிலிருந்து எடுத்து வருகிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதியதாக S.S.A. திட்டத்தின் மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதியதாக S.S.A. திட்டத்தின் மூலம் துவங்கப்பட்ட பள்ளிகளில் புதிய சத்துணவு மையங்களை விரைவில்

[2004 பிப்ரவரி 13

ஆரம்பிக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தவறான தகவலைத் தருகின்றார். பள்ளி சத்துணவு மையங்கள் என்பது வேறு; குழந்தைகள் நல மையம் என்பது வேறு. பள்ளி சத்துணவு மையத்திலே கிட்டத்தட்ட இருநூறுக்கு மேற்பட்ட, 5 வயது முதல் 15 வயது வரை படிக்கின்ற பிள்ளைகளுக்கு, அதிகமான குழந்தைகள் இருக்கின்றபோது அந்த உயர்நிலைப் பள்ளி, இந்த மாதிரி பள்ளிக் கட்டடங்களிலேயே மிகச்சிறப்பான முறையிலே சத்துணவுக் கட்டடத்தில் சமையல் செய்யப்பட்டு அங்கேயே போடக்கூடிய ஒரு வாய்ப்பு தொடர்ந்து சிறப்பாக நடைபெற்று வருகிறது. குழந்தைகள் மையங்கள் என்று சொல்கிறபோது அவர்கள் தனியாக ஒரு இடத்திலே அல்லது வாடகைக் கட்டடத்திலே அமர்த்தி அங்கே சமைத்துத் தருகிறார்கள். இடம் இல்லாத சூழ்நிலை இருக்கக்கூடிய ஒரு சில இடங்களிலேதான், பழுதடைந்து இருக்கக்கூடிய கட்டடங்கள் பழுதுபார்க்கின்ற வரையில் பக்கத்திலே இருக்கக்கூடிய இடத்திலேயிருந்து சமைத்துக் கொடுக்கக்கூடிய வாய்ப்பு இருக்குமே தவிர தமிழ்நாடு முழுமைக்கும் அப்படி ஒரு சூழ்நிலை இல்லை. சத்துணவுத் திட்டம் என்பது நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களின் உயிர்நாடித் திட்டம்; நம்முடைய அம்மா அவர்களின் அரசின் உயிர் நாடித் திட்டம். மிகச் சிறப்பான முறையிலே இதுபோன்ற தவறுகள் தொடரா வண்ணம் நடைபெற்று வருகின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 70, திரு. ஆர்.டி. கணேசன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

**70—**

## மாணவர் விடுதி

***41429—திரு. ஆர்.டி. கணேசன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 பிப்ரவரி 13]

(அ) தேனி தொகுதி, ஓடைப்பட்டி பேரூராட்சியில் அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் ஆதிதிராவிட மாணவ, மாணவியர்களுக்கு விடுதிகள் அமைத்துக் கொடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதிதாக ஆதிதிராவிடர் மாணவ/மாணவியர் விடுதிகள் துவங்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களை வணங்கி தேனி மாவட்டம், தேனி தொகுதி, ஓடைப்பட்டி பேரூராட்சியில் அரசினர் மேல்நிலைப் பள்ளியும், அதன் அருகே சீப்பாரப்பட்டி அரசினர் மேல்நிலைப் பள்ளியும், அதன் அருகே காமாட்சிபுரத்தில் அரசு மேல்நிலைப் பள்ளியும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. இதில் அதிகமான ஆதிதிராவிட மாணவ, மாணவிகள் பயின்று வருகிறார்கள். ஓடைப்பட்டி பேரூராட்சியில் ஏற்கெனவே பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதியும், கள்ளர் சீரமைப்புத் திட்டத்தின் வாயிலாக மாணவர் விடுதியும் செயல்பட்டு வருகின்றது. ஆகவே ஓடைப்பட்டி பேரூராட்சிப் பகுதியைச் சுற்றியுள்ள ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர் பயன்பெறும் பொருட்டு, ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர் விடுதி புதியதாகத் தொடங்க, ஆதிதிராவிடர்களுக்கு நல்ல திட்டங்களைத் தந்துகொண்டிருக்கிற மாண்புமிகு அம்மாவின் அரசு வருகின்ற ஆண்டிலாவது விடுதியைத் தொடங்க முன்வருமா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவரின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் இடத்திலிருந்து அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் நல மாணவ, மாணவியர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. ஆதிதிராவிட

[2004 பிப்ரவரி 13

நல மாணவ மாணவியரின் கல்வி பாதிக்கப்படாமல் இருப்பதற்காக விடுதிகளை ஏற்படுத்தி அவற்றில் தங்கும் இடமும் உணவும் இலவசமாக அரசு வழங்கி வருகிறது. இதன்படி மாநிலத்தில் 1,076 ஆதிதிராவிடர் நல மாணவ, மாணவியர் விடுதிகளும், 26 பழங்குடியினர் நல மாணவ, மாணவியர் விடுதிகளும் செயல்பட்டு வருகின்றன. மேலும் 253 பழங்குடியினர் நல உண்டு உறைவிடப் பள்ளிகளும் செயல்பட்டு வருகின்றன. இவ்விடுதிகள் மற்றும் உண்டு உறைவிடப் பள்ளிகள் அனைத்திலும் மொத்தமாக சுமார் 76,932 மாணவர்களும், 44,451 மாணவியர்களும் தங்கிப் பயின்று வருகின்றனர். 43 தொண்டு நிறுவனங்கள் நடத்தும் விடுதிகளிலும் மாணவர்கள் மற்றும் மாணவியர்கள் தங்கி கல்வி பயின்று வருகின்றனர். ஆக இவ்விடுதி மாணவர்கள் மற்றும் மாணவியர்களின் மொத்த எண்ணிக்கை 1,25,699. இவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த உணவுக் கட்டணத்தை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் மாதம் 225 ரூபாயிலிருந்து மாதம் 300 ரூபாயாக உயர்த்தி வழங்கி வருகிறார்கள். அதற்காக மொத்தம் உணவுக் கட்டணம் ரூபாய் 39.28 கோடி ரூபாய் ஆகிறது. எனவே உணவுக்காகவும், தங்கும் விடுதிகள், கல்வி உதவித் தொகைகள், முழுமானியத் தொகைகள், இலவச மிதி வண்டிகள் ஆகிய திட்டங்களின் மூலமாக பல நூறு கோடி ரூபாய் ஆதிதிராவிட மாணவ, மாணவியர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வழங்கி வருகிறது. மேலும் நிதிநிலை சீரடைந்தவுடன் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, மாணவ, மாணவியர்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள அம்மா அரசு அதைக் கனிவோடு ஆராயும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எஸ். தென்னரசு.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற ஆதிதிராவிட மாணவர் விடுதிகளில் இரவுக் காவலர்கள் இல்லை. துப்புரவுப் பணியாளர்களும் இல்லாததால் ஆதிதிராவிட மாணவர்களுடைய விடுதிகளில் இருக்கின்ற கழிப்பிடங்கள் எல்லாம் சுத்தம் செய்யப்படாமல் இருக்கின்றன. எனவே உடனடியாக ஆதிதிராவிட மாணவர் விடுதிகளுக்கு இரவுக் காவலர்களையும் துப்புரவுப் பணியாளர்களையும் நியமிப்பதற்கு அரசு முன் வருமா என்பதைத் தங்கள் வாயிலாக கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



2004 பிப்ரவரி 13]

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் குறிப்பாக தி.மு.க ஆட்சியில் ஆதிதிராவிட மாணவ, மாணவியர்களுடைய விடுதிகளில் கழிப்பிடங்கள் சரியாக இல்லை. அதேபோல அந்த அடுப்புக்களெல்லாம் விறகு அடுப்புகளாக இருந்து வந்தன. ஆனால் நம்முடைய புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் முதலைச்சராகப் பொறுப்பேற்ற பின்புதான், அந்தக் கழிப்பிடங்களையெல்லாம் நல்ல முறையில் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்; அவற்றிலுள்ள பழுதுகளெல்லாம் நீக்கப்பட வேண்டும் என்பதற்காக நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதுவரையில் 73 இலட்சம் ரூபாய் செலவில் பல்வேறு விடுதிகளில் உள்ள கழிப்பிடங்கள் நல்ல முறையில் இருக்க வேண்டுமென்று சொல்லி அந்தப் பணிகள் சிறப்பாகச் செய்யப்பட்டு வருகின்றன. மேலும் இருக்கிற காவலர்களை முறையாக இருக்கிற வகையில் நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். புதிதாக இந்த வகையில் நியமனம் எதுவும் இப்போது இல்லை.

***(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)***

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாணவர் விடுதிகளிலே இருக்கின்ற மாணவர்களுக்காக, உணவுச் செலவுக்காக ஒதுக்கப்படுகின்ற தொகையைக் காட்டிலும் சில விடுதிகளிலே பணியாற்றுகின்ற சமையலர்கள், காவலர்கள், வார்டன்கள் போன்றவர்களுடைய சம்பளச் செலவு அதிகமாக இருக்கிறது. உதாரணத்திற்கு, ஒரு விடுதியில் 30 மாணவர்கள் பயில்கின்றார்கள் என்றால் அவர்களுக்கு உணவுச் செலவுக்காக ஒதுக்கப்படுகின்ற தொகை 9,000 ரூபாய். ஆனால் அங்கே இருக்கக்கூடிய சமையலர், உதவியாளர், வார்டன் போன்றவர்களுக்காக ஒதுக்கப்படுகின்ற தொகை 15,000 ரூபாய் என்கின்ற அளவிலே இருக்கின்றது. எனவே அந்த இடங்களில் உணவு சமைக்கின்ற பணியைத் தனியாருக்கு contract மூலம் விடுகின்ற காரணத்தினால் அரசுக்கு நிதிச் செலவும் குறையும்; அங்கே ஒரு பாதுகாப்பான நிலையும் இருக்கும் என்கின்ற அந்த அடிப்படையில் உணவு விடுதிகளைப் பராமரிக்கின்ற பணியைத் தனியாரிடத்திலே விடுவதற்கு அரசு முன் வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

[2004 பிப்ரவரி 13

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே விடுதியிலே காப்பாளர்களாகப் பணி செய்கின்ற மற்றும் சமையலர், உதவியாளர் போன்ற பணி செய்கின்ற அப்படிப்பட்ட அலுவலர்களுக்கு அதிகமாக தொகை செலவு செய்யப்படுகிறது என்பதை அவர்கள் குறிப்பிட்டுச் சொல்கிறார்கள். ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டவர்கள்தான் விடுதிகளுக்குக் காப்பாளர்களாக இப்போது அந்தப் பணியை மேற்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் அரசிலே எல்லா விடுதிகளிலேயும் காப்பாளர்கள் முறையாக இருக்கிறார்கள்; அந்த மாணவர்களுடைய கல்வித் தரத்தை முன்னேற்றுவதற்கான நடவடிக்கையை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மேலும் மாணவர்கள் நல்ல முறையில் இப்போது விடுதியிலே தங்கி படித்து வருகிறார்கள். ஒவ்வொரு விடுதியும் 31—1/2 இலட்சம் ரூபாய்ச் செலவில் நல்ல கட்டடமாக கட்டப்பட்டு சுற்றுப்புற சுகாதார வசதியோடு, கிட்டத்தட்ட ஒவ்வொரு விடுதியிலும் 50 மாணவர்களுக்குக் குறைவில்லாத அளவிற்கு மாணவர்கள் அதிகமான எண்ணிக்கையில் இப்போது பயின்று வருகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10—45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.கே. செல்வராஜ்.

**திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஆதிதிராவிடருடைய நலன் காக்கிற ஒரு நல்ல அரசாக இருந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பதில் சொல்கிறபோது, புதிய விடுதி தொடங்குவதற்கு இப்போது நிதிவசதி இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசாங்கம் ஏற்கெனவே இருக்கின்ற அந்த விடுதிகளை எல்லாம் நல்ல புதிய கட்டடங்களாகக் கட்டித் தந்த காரணத்தாலும், உணவுக் கட்டணம் மிக அதிகமான அளவிலே உயர்த்தித் தந்திருக்கிற காரணத்தாலும், ஆதிதிராவிட மாணவர்கள் அந்த விடுதிகளிலே அதிகமான அளவிலே சேர்ந்து தங்கிப் படித்து வருவதற்கு விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள்.



2004 பிப்ரவரி 13]

இன்றைக்கு ஒவ்வொரு விடுதிக்கும் 50 இடங்கள் மட்டும்தான் அரசாலே ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அதிகமான அளவிலே மாணவர்கள் இந்த விடுதிகளிலே சேர்ந்து தங்கிப் படிப்பதற்கு கூடுதலாக உயர்த்தித் தருவதற்கு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய விடுதி கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்படவில்லை என்று தவறாகச் சொல்கிறார். வாடகைக் கட்டடங்களில் சுகாதார வசதியில்லாத இடங்களில் நடைபெற்று வருகின்ற விடுதிகளுக்கு எல்லாம் சொந்தக் கட்டடமாகக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்றுதான் அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் ஆணையிட்டு இப்போது 316 விடுதிகளின் கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த ஆண்டும் 100 விடுதிகள் கட்ட வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். கடந்த தி.மு.க. ஆட்சியில் 132 விடுதிக் கட்டடங்கள் 5 வருடக் காலங்களில் கட்டுவதற்கு உத்தரவிட்டும், 51 விடுதிக் கட்டடங்கள் அரைகுறையாகக்கூட கட்டி முடிக்காமல் போய்விட்டார்கள். இப்போது அம்மா அவர்கள் அதையும் கட்டிமுடித்து குறிப்பாக விடுதியிலே தங்கிப் படிக்கிற மாணவ, மாணவியர்களின் கல்வியின் தரம் உயர வேண்டுமென்று இப்போது அனைத்துக் கட்டடங்களையும், வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்ற அனைத்து விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடம் இன்னும் ஓராண்டுக்குள் கட்டி முடிக்க வேண்டுமென்று அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் இப்போது கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த விடுதியிலே தங்கிப் படிப்பதற்கு மாணவ, மாணவியர்கள் அதிகமாக விரும்பி வருகிறார்கள், இட ஒதுக்கீடு கூடுதலாக வழங்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாவட்டத் தலைமையிடங்களில் நடைபெறுகிற கல்லூரி விடுதிகளில் இதுபோன்ற மாணவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றும் முகமாக 1000 இடங்கள் கூடுதலாக ஒதுக்கீடு செய்து அதற்கான இடங்களில் கல்லூரி மாணவ, மாணவியர்கள் தங்கிப் படித்து வருகிறார்கள்.

அதேபோல் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கான விடுதிகளை உயர்த்தி வழங்க வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கோரிக்கை வைத்திருக்கிறார். நிதிநிலைமை சீரடைந்தவுடன் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை ஆராயப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொள்ளாச்சி ஜெயராமன்.

**திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மாணவ, மாணவியருடைய விடுதிகள் சுமாராக *10* ஆண்டுகளுக்கு முன்பு புரட்சித் தலைவருடைய ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டவை; மற்றும் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் முன்பு முதலமைச்சராக இருந்தபோது கட்டப்பட்ட விடுதிகள். அவற்றில் சிறு, சிறு பழுதுகள் ஏற்பட்டு, குடிநீர் சரியாக வராமலும், மின் விளக்குகள் சரியாக எரியாமலும், கதவு, ஜன்னல்கள் போன்றவை சில இடங்களில் பழுது பார்க்கப்பட வேண்டிய சூழ்நிலை இருப்பதன் காரணத்தை முன்னிட்டு, பொதுவாக நிதி ஒதுக்கப்பட்டு ஆதிதிராவிட மாணவ, மாணவிகளுடைய விடுதிகளை பழுதுபார்ப்பதற்கென ஒரு முனைப்பான திட்டத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லரசு இந்த ஆண்டு மேற்கொள்ள முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.க. ஆட்சியில் விடுதிகள் எல்லாம் பழுது பார்க்கப்படாமல், பல்வேறு விடுதிகளில் குறைபாடுகள் இருந்தது உண்மை. ஆனால் அந்தக் குறைபாடுகள் எல்லாம் நீக்கப்பட வேண்டும். மாணவர்கள் சுகாதார வசதியோடு படிக்க வேண்டும் என்ற நல்ல சீரிய நோக்கத்தோடுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் குறிப்பாக விடுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்க வேண்டும், சுகாதார வசதியோடு கழிப்பிட வசதி நல்ல முறையில் இருக்க வேண்டும் என்பதை உணர்ந்து அதற்கென தேவையான நிதி ஒதுக்கீடு செய்து அந்த விடுதிகள் எல்லாம் பராமரிக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தமிழரசன்.





**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மாணவ, மாணவிகளுக்கு—கல்லூரி, பள்ளி மாணவ, மாணவிகளுக்கு—புதிதாக மாணவ, மாணவியர்கள் விடுதிகள் தொடங்குகிறபோது எந்த அடிப்படையிலே தொடங்கப்படுகிறது? வளர்ந்து வரும் மக்கள் தொகை விகிதாச்சார அடிப்படையிலா? அல்லது புதிதாக பள்ளிகள், கல்லூரிகள், சுயநிதிக் கல்லூரிகள் உருவாகிற தன்மையிலா? அப்படியானால், சென்னையைப் போன்று வளர்ந்து வருகிற, மிகப் பெரிய கோவை, திருச்சி, மதுரை போன்ற இப்படிப்பட்ட மாநகரங்களிலே, கடந்த *3* ஆண்டுகளிலே எத்தனை விடுதிகள் புதிதாகத் தொடங்கப்பட்டிருக்கின்றன? மக்கள் தொகை விகிதாச்சார அடிப்படையில் என்று சொன்னால், *2001* ஆம் ஆண்டு மக்கள் தொகையின் விகிதாச்சார அடிப்படையிலா? இந்தச் சட்டப் பேரவையிலேயே இரண்டு சட்டசபை உறுப்பினர்களை அதிகமாக்குகிற நிலைமை வந்திருக்கிறது. ஆகவே அந்த அடிப்படையிலேயா? கல்லூரி அடிப்படையிலா? எதை அடிப்படையாகக் கொண்டு இவை தொடங்கப்படுகின்றன? என்ற இந்த விவரங்களைத் தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்—மாணவ, மாணவியர்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள அம்மா அவர்கள்—சென்னையிலே புதிதாக கல்லூரி மாணவியர்களுக்குப் புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டு தற்போது பணி முடிந்து விடுதியில் தங்கிப் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் விடுதிகள் தொடங்கப்படுகின்றனவா? எந்த அடிப்படையில் விடுதிகள் தொடங்கப்படுகின்றன என்ற கேள்வியையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கிறார்கள். நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்போது வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகிற விடுதிகள் சொந்தக் கட்டடங்களில் இயங்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டு, அதன்படி இப்போது கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. புதிதாக விடுதிகள் தொடங்கும் திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை என்பதைத்தான் நான் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[2004 பிப்ரவரி 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 71, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

71—

## நகரப் பேருந்து

**•1584—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரூர் தொகுதி, ஊத்தங்கரை டெப்போவிலிருந்து மிட்டப்பள்ளி, கொட்டுக்காரம்பட்டி, பாவக்கல் வழியாக அனுமன் தீர்த்தம் வரை அரசு நகரப் பேருந்து இயக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரூர் தொகுதி, ஊத்தங்கரை டெப்போவிலிருந்து மிட்டப்பள்ளி, கொட்டுக்காரம்பட்டி, பாவக்கல் வழியாக அனுமன் தீர்த்தம் வழித் தடத்தில் அரசு நகரப் பேருந்து மற்றும் தனியார் சிற்றுந்து மூலம் போதுமான பேருந்து வசதி உள்ளதால் மேலும் இந்த வழித்தடத்தில் கூடுதலாகப் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை.

வினா எண் 72, திரு. கு. அண்ணாமலை, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

72—

## பேருந்துகள் இயக்குதல்

**•7015—திரு. கு. அண்ணாமலை:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2004 பிப்ரவரி 13]

கீழப்பாவூர் ஒன்றியம், சுரண்டை பேரூராட்சி, பாவநாசபுரம், அம்மையாபுரம், ஆனைகுளம் ஆகிய கிராமங்களுக்கு இயங்கிக் கொண்டிருந்த வழித்தடம் எண் 13ஏ, 10 ஆகிய பேருந்துகள் நிறுத்தப்பட்டதை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

எதிர்பாராதவிதமாக ஏற்படும் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக ஏற்பட்ட சில சுற்றுக்கள் இழப்பு நீங்கலாக தடம் எண் 13ஏ மற்றும் தடம் எண் 10 ஆகியவை தடத்தில் முறையாகவே இயக்கப்பட்டு வருகின்றன. வேறு எந்தச் சந்தர்ப்பத்திலும் இவ்வழித்தடங்களில் பேருந்து இயக்கம் நிறுத்தி வைக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கு. அண்ணாமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 73, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

73—

## காகித ஆலை

**•17243—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பேராவூரணி பகுதியில் கிடைக்கும் வைக்கோலை மூலப் பொருளாகக் கொண்டு காகித ஆலை துவங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி பகுதியில் வைக்கோலை மூலப்பொருளாகக் கொண்டு காகித ஆலை அமைக்கும்

[2004 பிப்ரவரி 13

திட்டத்திற்கான சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 74, திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.*

**74—**

**கால்நடை மருந்தகம்**

***13208—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோவில், மூலனூர் ஒன்றியம், கன்னிவாடியில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 75, திரு. பி.எம். நரசிம்மன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.*

**75—**

**கால்நடை மருந்தகக் கட்டடம்**

***18979—திரு. பி.எம். நரசிம்மன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி ஒன்றியம், கே.ஜீ. கண்டிகை கிராமத்திலுள்ள கால்நடை மருந்தகத்திற்குக் கட்டடம் கட்டப்படுமா?



2004 பிப்ரவரி 13]

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையைப் பேரவைக்கு அளிக்கிறேன். திருவள்ளூர் மாவட்டம், மப்பேடு கிராமத்தில் கடந்த *4-9-2003* ஆம் தேதியன்று நடைபெற்ற சிறப்பு கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாமின்போது, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுரையின்பேரில், அதில் நான் கலந்துகொண்டேன். அப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் இதுகுறித்து பரிந்துரைக்கப்பட்டது. அந்த விழாவிற்கு மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்கள் வந்திருந்தார்கள். கே.ஜீ. கண்டிகை கால்நடை மருந்தகத்திற்கு கட்டடம் கட்ட ஸ்வர்ண ஜெயந்தி என்ற பொன்விழா சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூபாய் எட்டு இலட்சம் வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதற்கான வரைபடமும் மதிப்பீடும் துறையால் ஏற்கப்பட்டு, கட்டடப் பணிகளுக்கான டெண்டர் விடப்பட்டுள்ளது. கால்நடை மருந்தகத்திற்கான கட்டடப் பணிகள் விரைவிலே நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போதுள்ள மருந்தகக் கட்டடம், கூட்டுறவுத் துறைக்குச் சொந்தமானக் கட்டடத்தில் வாடகை இல்லாமல் நல்ல முறையில் இயங்கி வருகின்றது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் *10—55*

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *2001-2002* ஆம் ஆண்டில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் தொடங்கப்பட்ட கால்நடை மருந்தகத்திற்குக் கட்டடம் கட்டும் பணி தொடங்கப்பட்டதற்கு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு என் தொகுதி மக்களின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதேபோல என்னுடைய பள்ளிப்பட்டு தொகுதியில், பாலாபுரம் கிராமத்தில் கால்நடை மருந்தகம் தொடங்கப்பட்டுள்ளது. இதற்குக் கட்டடம் கட்டிக்கொடுக்க மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மக்களின் ஓர் அங்கமான அரசு ஊழியர்

மீது மட்டுமல்ல, அனைத்து மக்களின்மீதும் கருணை உள்ளம் கொண்டவர்கள். அன்பிற்கும் தாயுள்ளத்திற்கும் எல்லையற்ற, எல்லை வரையறுக்கமுடியாத அம்மா அவர்கள், கால்நடைகள்மீது அளவற்ற அன்பும் மாறாத பாசமும் கொண்டவர்கள். அதை உறுதிப்படுத்தும் வகையில்தான் கடந்த ஆண்டு 72 கிளை நிலையங்கள் கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்த ஆணையிட்டார்கள். அதில் ஒன்றாக அரசு தலைமைக் கொறடா அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பாலாபுரம் கால்நடைக்கிளை நிலையமும் மருந்தகமாகத் தரம் உயர்த்தப்பட்டது. அரசின் நிதி நிலை குறித்து அவர்கள் அறிவார்கள். அவர்கள் தொகுதியில் கே.ஜீ. கண்டிகையில் மருந்தகக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பாலாபுரம், அண்ணன் கொறடா அவர்கள் பிறந்த ஊர் என்பதும் எனக்குத் தெரியும். பாலாபுரத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு தமிழக முதல்வர்... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது எப்படித் தெரியும்? *(சிரிப்பு)* அவர் சொன்னதினாலே தெரியுமா?

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தபோது தெரிந்து கொண்டேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் அளித்துள்ள சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அவர்கள் சுமார் ஒன்பது இலட்சம் ரூபாய் ஒதுக்கிக் கொடுப்பார்களேயானால், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று நிச்சயமாக அங்கேயும் ஒரு மருந்தகக் கட்டடம் கட்டிக்கொடுக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாக அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரின் கேள்விக்கு கொறடா பதில் சொல்வார்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் ஆதிதிராவிடர்களுக்கு தனி நபர் பயனீட்டாளர்கள் பயன்பெறும் வகையிலே கால்நடைகள் வளர்க்க கடன் வசதி பெற மானியம் வழங்கப்பட்டு வந்தது. இது தொடர்ந்து வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் கேள்விக்குப் பதில் இல்லையே?





**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலேயிருந்து வருகிற ஆண்டிலே அதற்குண்டான மதிப்பீட்டுத் தொகையினைக் கொடுக்க நான் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு கொறடா அவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சி மலர்ந்தவுடன் ஒன்றியத்திற்கு 15 பயனாளிகளுக்கும் புறக்கடை கோழி வளர்ப்புக்காக மானியக் கடன் வழங்கப்பட்டது. அதைப்போல ஒன்றியத்திற்கு 5 பயனாளிகளுக்கு எருமைக் கிடேரி கன்றுகளுக்கும் கடன் உதவி வழங்கப்பட்டது. இதில் ஆடுகளுக்கான கடனுதவியும் அடங்கும். நிதி நெருக்கடி காரணமாக, அவ்வாறு தொடர்ந்து வழங்க இயலாத காரணத்தால் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமாக மாண்புமிகு அம்மா அவர்கள் பிறந்த நாளையொட்டி புறக்கடை கோழிவளர்ப்புக்கு முழு மானிய உதவிகள் வழங்கப்பட்டன. அரசின் நிதி நெருக்கடி சீரானதும் வருகின்ற மானியக் கோரிக்கையின்போது பல்வேறு திட்டங்கள் கொண்டுவரப்படுவதுடன், மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்களின் கோரிக்கையும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான கவனத்திற்கு சமர்ப்பிக்கப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 76, திருமதி மல்லிகா சின்னசாமி, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**76—**

**சமூகக் காடுகள்**

**•38836—திருமதி மல்லிகா சின்னசாமி:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருச்சி மாவட்டம், முசிறி தொகுதி, எதுமலை ஊராட்சி, காமாட்சிபுரம் கிராமத்தை நடப்பாண்டில், சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் சேர்க்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

[2004 பிப்ரவரி 13

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், முசிறி தொகுதி, எதுமலை ஊராட்சியைச் சேர்ந்த காமாட்சிபுரம் என்ற குக்கிராமம், வரதராஜபுரம் கிராமத்துடன் இணைந்து தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 2002-2003 ஆம் ஆண்டில் திட்டப் பயன்பாட்டிற்காக எடுக்கப்பட்டு, வனத்தைச் சார்ந்து வாழும் காமாட்சிபுரத்தைச் சேர்ந்த 15 வனக் குழு உறுப்பினர்களுக்கு மாற்றுத்தொழில் செய்வதற்காக ரூபாய் 46,759/-கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. காமாட்சிபுரம் கிராமத்தில் கண்மாய் ஏதும் இல்லை. அதனால் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் இக்கிராமத்தைச் சேர்க்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரின் பதிலுக்கு நன்றி. மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் எனது தொகுதியில் உள்ள எதுமலை என்ற ஊரில் உள்ள.....

முற்பகல் 11—00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திருமதி மல்லிகா சின்னசாமி:** ஏரியில் வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் ரூ.8.10 இலட்சத்திற்கு தூர் வாரும் பணி நடைபெற்றது. அதனால் அந்த ஏரியில் நீர்வரத்து மழை பெய்ததால் அதிகரித்து, அங்குள்ள விவசாயிகள் ஒரு போகம் பயிர் செய்தவர்கள் இன்றைக்கு இரண்டுபோகம் பயிர் செய்யும் நிலையை ஏற்படுத்தி உள்ளது. மேலும் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் தொலைநோக்குத் திட்டமாகிய மழைநீர் சேகரிப்புத் திட்டம் என்ற மாபெரும் திட்டத்தால் அந்தப் பகுதியிலுள்ள கிணறுகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளதாலும், எங்கள் பகுதியிலுள்ள விவசாயிகளின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் மண்ணச்சநல்லூர் ஒன்றியத்தில் உள்ள மணியாங்குறிச்சி ஊராட்சியில்



2004 பிப்ரவரி 13]

காப்புக்காட்டை ஒட்டியுள்ள ஸ்ரீதேவிமங்கலம் என்ற கிராமத்தையும், எதுமலை காப்புக்காட்டை ஒட்டியுள்ள பெரகம்பி கிராமத்தையும் நடப்பாண்டில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் சேர்க்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் பகுதி-2, தமிழ்நாடு இயற்கை வள நிர்வாகத் திட்டம் என்று அழைக்கப்பட்டு, அம்மா அவர்களுடைய ஆலோசனையின்படி, ரூ.779.33 கோடி மதிப்பீட்டில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கிக்கு திட்டத்தை நிறைவேற்ற கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது. வரும் ஆண்டில் நிதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நிதி கிடைத்தவுடன் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 77, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

**77—**

### கிரயப் பத்திரம்

**•19160—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 3-வது வட்டம், நேரு நகர் மற்றும் துர்காதேவி நகரில் வசிப்பவர்கள் குடிசை மாற்று வாரியத்திற்கு முழுத் தொகையையும் செலுத்திய பின்பும் கிரயப்பத்திரம் வழங்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) அவர்களுக்கு கிரயப் பத்திரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2004 பிப்ரவரி 13

(அ) அரசு அறியும்.

(ஆ) இதுகுறித்து தக்க நடவடிக்கை அம்மா அவர்களின் அரசால் எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பதாகக் கூறியதற்கு நன்றி. 1980 ஆம் ஆண்டு மறைந்த மனிதப் புனிதன் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால், சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம் ஏற்படுத்தப்பட்டு, மாநகரத்திலே இருக்கின்ற 50 குடிசைகளுக்கு மேற்பட்ட பகுதிகளைக் கண்டறிந்து, அந்தப் பகுதிகளின் இடங்களை குடிசை மாற்று வாரியம் எடுத்துக்கொண்டு, சம்பந்தப்பட்ட துறைகளிடமிருந்து தடையின்மைச் சான்றிதழைப் பெற்று, அந்தப் பகுதிகளினுடைய அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்பட்டன. அந்தத் திட்டத்திலே ஒரு பகுதிதான் நான் குறிப்பிட்டிருக்கின்ற இந்த நேரு நகர், துர்காதேவி நகர் பகுதிகள். இந்தப் பகுதிகளிலே 900 குடியிருப்பாளர்கள் உள்ளார்கள். இவர்களில் அரசு நிர்ணயித்த தொகையை முழுமையாகக் கட்டி முடித்தவர்கள் 75 சதவிகிதம் பேர் இதில் அடங்குவார்கள். இவர்களுக்கு கடந்த 10 ஆண்டுகளாக கிரயப் பத்திரம் பெறுவதில் தாமதம் ஏற்பட்டதற்குண்டான காரணத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், முழுத் தொகையை கட்டி முடித்த பின்பும், இன்னும் கிரயப் பத்திரங்கள் கொடுக்கப்படவில்லை என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். இந்த நிலையையெல்லாம் அறிந்த மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், குடிசை மாற்று வாரிய அதிகாரிகள் அத்தனை பேரையும் அழைத்து, இதுபோன்று பணம் செலுத்திய இடங்களுக்கான கிரயப் பத்திரங்களை உடனடியாகக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று அறிவுறுத்தி, அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலம், சென்னைப் பெருநகர எல்லைக்குள் 7 இடங்களில் இரயில்வே துறைக்குச் சொந்தமான நிலங்கள் வாரியத்தின்மூலம், சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டப் பகுதியில் செயல்படுத்தப்பட்டு உள்ளது.



2004 பிப்ரவரி 13]

இவ்வகையிலே 77.29 ஏக்கர் இரயில்வே துறையினுடைய நிலங்கள் வாரியத்திற்கு மாற்ற கோரப்பட்டு பல ஆண்டுகளாக கடிதப் போக்குவரத்து நடைபெற்று வருகிறது. இந்த வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள நேரு நகர் மற்றும் துர்காதேவி நகர்ப் பகுதிகளில் அமைந்துள்ள இடங்கள் தெற்கு இரயில்வே துறைக்குச் சொந்தமான நிலங்களாகும். இந்த நிலங்களை குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்வது குறித்து, இரயில்வே துறையோடு தொடர்புகொண்டு வருகின்றோம். மேற்கண்ட நிலங்களை இரயில்வே துறையிடமிருந்து தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்த பின்பு கிரயப் பத்திரம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை கண்டிப்பாக எடுப்போம்.

முற்பகல் 11—05

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்திலே இப்படி கிரயப் பத்திரங்கள் பெறுவதில் முட்டுக்கட்டையாக இரயில்வே துறைக்குச் சம்பந்தப்பட்ட இடங்கள் ஏழு இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட சென்னை மாநகரத்திலே 700-க்கும் மேற்பட்ட திட்டப் பகுதிகள் இப்படி உருவாக்கப்பட்டு, ஒட்டுமொத்தமாக 500-க்கும் மேற்பட்ட திட்டப் பகுதிகளிலே இப்படி கிரயப் பத்திரங்கள் கிடைக்கப் பெறாமல் இருப்பதாக அறிகிறேன். இதற்கு நில மாற்றம் செய்யப்படுவதில் இருக்கின்ற காலதாமதம் ஒரு காரணமாக அமைந்திருக்கிறது. ஒரு இடத்திற்கு கிரயப் பத்திரம் பெற்றப் பிறகுதான் வட்டாட்சியர் அலுவலகத்தில் பட்டாவிற்கு மனு செய்து பட்டா பெறுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. இடத்திற்குப் பட்டா கிடைத்த பிறகுதான் அந்த இடத்தின் உரிமையாளர்கள் அந்த இடத்தை தங்களுடைய சொந்தப் பயன்பாட்டிற்காக, தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகத் தேவைப்படுகின்ற பணத்திற்கு அடமானம் வைப்பதற்கோ, விற்பதற்கோ பயன்படுத்தப்படுகிற ஒரு சூழ்நிலை இருப்பதால் மாநகரத்திலே ஒரு இலட்சத்திற்கும் அதிகமான குடும்பதாரர்கள் இந்த நில மாற்றத்தால் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்திலே கொண்டு இதற்கு என்று தனியாக ஒரு குழுவை அமைத்து இதற்குண்டான நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள், விரைவில் கிரயப் பத்திரம் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று

தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். அதற்கான முயற்சிகளை மேற்கொள்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னவாறு 744 திட்டப் பகுதிகள், ஏறக்குறைய 1,36,199 குடும்பங்கள் இதிலே பயன் அடைந்துள்ளார்கள். இதிலே 157 திட்டப் பகுதிகளிலே அமைந்துள்ள நிலங்கள் மட்டும் வாரியத்தின் பெயரில் நில மாற்றம் செய்யப்பட்டு இதன்மூலம் 32,560 பேருக்கு, முழுப் பணம் செலுத்தியவர்களுக்கு கிரயப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இன்னும் வழங்கப்படாத திட்டப் பகுதிகளாக 587 திட்டப் பகுதிகள் இருக்கின்ற காரணத்தால் இதை அறிந்த தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதிலே பயன் பெறப்போகின்ற 1,03,639 குடும்பங்கள், முழுப் பணம் செலுத்தியவுடன் அவர்களுக்கான கிரயப் பத்திரங்கள் உடனடியாக வழங்கப்பட வேண்டுமென்ற வகையிலே இன்றைக்கு மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்கள் இதற்காக ஒரு கமிட்டியை அமைத்து உடனடியாக எல்லாத் துறைகளிடமும் கலந்து இதற்கான நடவடிக்கைகளை எடுத்து அவர்களுக்கான கிரயப் பத்திரங்கள் கொடுக்கப்பட வேண்டுமென்ற வகையில் இன்றைக்கு அறிவுறுத்தி இருக்கிறார்கள். அந்த வகையில் இந்தத் துறை அதற்கான நடவடிக்கைகளை இன்றைக்கு எடுத்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 78, திரு. சு. சிவராஜ், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**78—**

## பால் சேகரிப்பு மையம்

**•36535—திரு. சு. சிவராஜ்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரிஷிவந்தியம் தொகுதி, குன்னியூர் ஊராட்சியில் பால் சேகரிப்பு மையம் மற்றும் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ரிஷிவந்தியம் தொகுதி, குன்னியூர் ஊராட்சியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 79, திரு. ஆஸ்டின், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

**79—**

## மீனவர்களுக்கு சலுகைகள்

**•3883—திரு. ஆஸ்டின்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடற்கரை கிராமங்களிலுள்ள மீனவர்களுக்கு வழங்கப்படும் இலவச வீடு கட்டும் திட்டம் போன்ற பல சலுகைகள் உள்நாட்டு மீனவர்களுக்கும் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். மீனவர் இலவச வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் 2001-2002 ஆம் ஆண்டு முதல் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் நிலமுள்ள உள்நாட்டு மீனவர்களுக்கு வீடு ஒன்று ரூ.37,000/- என்ற அலகுத் தொகையில் ஒவ்வொரு வருடமும் 500 வீடுகள் அரசால் வழங்கப்பட்டு வருகிறது. அதுபோக, மீன் வளர்ப்போர் சொந்த நிலத்தில் மீன் பண்ணை அமைக்கவும், மீன் வளர்ப்புக் குளங்கள் புதுப்பிக்கவும், இடுபொருட்களுக்கும் மானியம் வழங்கப்படுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டு உள்நாட்டு மீனவர்களுக்கு 500 வீடுகள்

[2004 பிப்ரவரி 13

கட்டிக்கொடுப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்த மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதோடு, கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோயில் நகரத்திலே வடசேரி, கோட்டாறு உள்ள பகுதிகள் மற்றும் மாவட்டத்திலே உள்ள களியக்காவிளை, மார்த்தாண்டம், தக்கலை, புத்தேரி உள்ளிட்ட சுமார் 44 கிராமங்களிலே 10,000 உள்நாட்டு மீனவர்கள் உட்பட தமிழ்நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான உள்நாட்டு மீனவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு இந்த நிதியாண்டிலும் 500 வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியபடி, வருகிற நிதியாண்டிலே அவர்களுடைய கோரிக்கைகள் வரப்பெற்றபின் அந்தந்த கிராமத்திற்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் கடலிலே மீன் பிடிக்க இயலாத பருவ காலங்களிலே, அரசு அவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கி வருகிறது. அதேபோல் உள்நாட்டு மீனவர்களும் கடல்சார் மீனவர்களைச் சார்ந்து தொழில் செய்து வருகிறார்கள். கடல்சார் மீனவர்கள் மீன் பிடிக்க இயலாத காலங்களிலே இவர்களுக்கும் தொழில் இருக்காது. அதேபோல, குளங்களிலே மீன் பிடிக்கக்கூடிய உள்நாட்டு மீனவர்களும் மார்ச், ஏப்ரல், மே ஆகிய மூன்று மாதங்களில் மட்டும்தான் தொழில் செய்ய முடியும். எனவே உள்நாட்டு மீனவர்களுக்கும் அவர்கள் தொழில் செய்ய முடியாத காலங்களிலே, கடல்சார் மீனவர்களுக்கு வழங்கப்படுவதுபோல, நிவாரண உதவிகளை வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் கடல்சார் மீனவர்களுக்கு, out-board engine வாங்குவதற்காக அரசு subsidy-யினை வழங்கி வருகிறது. அதைப்போல உள்நாட்டு மீனவர்களும் அவர்கள் தொழில் செய்வதற்குப் பயன்படுத்துகின்ற இருசக்கர மோட்டார் வாகனங்களை வாங்குவதற்கு அரசு மானியம் வழங்குவதற்கு முன்வருமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2004 பிப்ரவரி 13]

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், கடல்சார் மீனவர்களுக்கு சேமிப்பு மற்றும் நிவாரணத் தொகை Savings and Relief Fund கொடுப்பது போன்று, உள்நாட்டு மீனவர்களுக்கும் கொடுக்கப்படுமா என்று கேட்டிருக்கின்றார்கள். இந்த நிவாரணம் கொடுக்கப்படுவதன் நோக்கமே, இயற்கைச்சீற்றத்தால், அதாவது புயல், மழை வருகின்ற காலங்களிலே, நான்கு மாத காலத்திற்கு மீனவர்கள்—கடல்சார் மீனவர்கள்—மீன் பிடிக்கக் கடலுக்குள் செல்ல முடியாது என்ற நோக்கத்திலேதான் அது கொடுக்கப்படுகிறது. புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் மகளிருக்கும் அதுபோன்று நிவாரணத் தொகை கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு அனுப்பி, அந்த நிதி கொடுக்கப்பட்டு, மக்கள் மத்தியிலே, மீனவ மக்கள் மத்தியிலே இன்றைக்கு வரவேற்பு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையிலே, உள்நாட்டு மீனவர்களுக்கும் நிவாரணத் தொகை வழங்க வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். இதைக் கருத்துருவாக மத்திய அரசுக்கு அனுப்பி, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு எடுத்திருக்கின்ற ஒரு முடிவின் அடிப்படையில் கடற்கரையை ஒட்டி 500 மீட்டருக்குள்ளாக, புதிதாக வீடுகளைக் கட்டக்கூடாது என்கிற சட்டத்தைப் போட்டிருக்கிறார்கள். ஆனால் பாரம்பரியமாக கடற்கரைப் பகுதியிலே வாழ்ந்து வருகிறவர்கள் அந்தப் பகுதியிலே புதிதாக வீடுகளை அமைக்கிறபோது, அவர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்படுவதில்லை. அதேபோல புதிதாக வீடு கட்டுபவர்களுக்கு ரேஷன் கார்டுகளும் தர இயலாது என்கிற ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. இதனால் நூற்றுக்கணக்கான மீனவர்கள் என்னுடைய பகுதியிலே பாதிக்கின்ற ஒரு சூழ்நிலை உள்ளது. எனவே புதிதாக வீடுகளைக் கட்டி இருப்பவர்களுக்கு மின் இணைப்பு வழங்குவதற்கும், குடும்ப அட்டைகள் வழங்குவதற்கும் அரசுத் தரப்பிலே, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஆணை பிறப்பிக்குமா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, சில மாவட்டங்களில் இதுபோன்று கோரிக்கைகள் வரப்பெற்றிருக்கின்றன. குறிப்பாக, திருவள்ளூர் மாவட்டத்திலும், இன்னும் இதுபோன்ற இடங்களிலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய தனிக் கவனத்திற்குக் கொண்டு சென்று, Enter upon permission என்று சொல்லப்படுகின்ற அந்த அடிப்படையிலே அந்த நிலங்கள் எல்லாம் கொடுக்கப்படுகின்றபோது, அதுபோன்று வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. அந்த அடிப்படையிலே நீங்களும் மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகி, முடியாத நேரத்தில் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, இந்தக் கோரிக்கையை நிறைவேற்றலாம் என்பதை நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையில், பொதுவாக மீனவர்கள் கடற்கரையை ஒட்டி வசிக்கின்ற அந்தப் பகுதியில் இருக்கின்ற காரணத்தால், அவர்கள் கடற்கரையிலே இருந்து வெகுதூரம் சென்று தொழில் செய்ய முடியாத ஒரு நிலைமை உள்ளது. எனவே அருகிலே இருக்கும்போது, அவர்கள் N.O.C. வாங்குவதிலே பெரும் சிக்கல் இருப்பதை அரசு உணர்ந்து, மாண்புமிகு அம்மா அவர்கள்கூட தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்கள்; எனவே N.O.C. இல்லையென்றாலும்கூட, ஒரு Indemnity Bond வாங்கிக் கொண்டு அவர்களுக்கு மின் இணைப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். ராஜம்மாள்.

**திருமதி எஸ். ராஜம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியிலே மீனவர்களின் நலன் பாதுகாக்கப்பட்டு வருகின்ற நேரத்திலே, முந்தைய ஆட்சிக் காலத்திலே என்னுடைய பகுதியிலே 27 வீடுகள்தான் கட்டித் தந்தார்கள். இப்போது நம்முடைய ஆட்சியிலே, 2001-2002 ஆம் ஆண்டிலேயிருந்து இதுவரை எத்தனை வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள்? இந்த ஆண்டிலே எத்தனை இலவச வீடுகள் கட்டப்படும் என்பதை அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.





முற்பகல் 11-15

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்தக் கேள்வி பற்றி நன்றாகத் தெரியும். தீ பிடித்து எரிந்த நேரத்திலே அந்தப் பகுதிக்கு 102 வீடுகள் கட்ட வேண்டுமென்ற கோரிக்கை வைத்து, அந்த நிலம் கையகப்படுத்தாமல் அந்த வீடுகள் எல்லாம் கட்டப்படாமல் இருக்கின்றன. அந்தக் கோரிக்கைகளை கூறுகின்ற காலத்தில், நிச்சயமாக வருகின்ற காலத்திலே நிறைய வீடுகள் கட்டுவதற்கான அனுமதி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 80, திரு. பி.எஸ். அருள், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**80—**

### சுற்றுலா மையத்தைச் சீரமைத்தல்

***7681—திரு. பி.எஸ். அருள்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், கிள்ளை பிச்சாவரம் அறிஞர் அண்ணா சுற்றுலா மையம் பராமரிப்பின்றி பாழடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், கிள்ளை பிச்சாவரம் அறிஞர் அண்ணா சுற்றுலா மையத்தில் கட்டமைப்புப் பணிகள் செய்து முடிக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காக ஓய்வு உளைச்சல் இல்லாமல் உழைத்துக் கொண்டிருக்கும் மாசற்றத் தலைவி

மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு எனது சிரம் தாழ்ந்த வணக்கத்தைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடல்வாழ் உயிரினங்களின் ஆய்வு மேற்கொள்ளும் உலகளாவிய ஆராய்ச்சியாளர்களுக்குப் பாடப் புத்தகமாகவும், உலக அளவில் மாங்ரோவ் எனப்படும் தாவரங்களை உள்ளடக்கிய சதுப்பு நிலப் பகுதியில் இரண்டாம் இடத்தைப் பிடிப்பதற்கான 1,099 ஹெக்டேர் நிலப்பரப்பினைக் கொண்டதும், வாழ்ந்து மறைந்த பாரிவள்ளல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் அடையாளம் காட்டப்பட்டதும் ஒரே மாதிரியான தோற்றம் கொண்ட 4,448 கால்வாய்களைக் கொண்டதுமான, உலகப் புகழ்பெற்ற சுற்றுலா மையமாகத் திகழ்கின்ற பிச்சாவரம் பேரறிஞர் அண்ணா சுற்றுலா மையத்தினை சீரமைத்துச் செப்பனிடவும், குழந்தைகள், பெரியவர்கள், சுற்றுலாப் பயணிகள் மனம் மகிழும் விதத்தில் பூங்காக்கள் அமைத்திடவும் ரூ.55 இலட்சம் ஒதுக்கீடு செய்து பணிகள் அனைத்தும் நிறைவடையும் நிலையில் இருப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்து தந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் சார்பிலும், எனது தொகுதி மக்களின் சார்பிலும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிச்சாவரம் சுற்றுலா மையம் படகு சவாரிக்கு ஏற்ற இயற்கை எழில் கொஞ்சும் இடமாக உள்ளது. தற்போது பிச்சாவரம் சுற்றுலா மையத்தில் கையால் இயக்குகின்ற 27 படகுகள் உள்ளன. அவற்றில் 20 படகுகள் மட்டுமே ஓடும் நிலையில் உள்ளன. எனவே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இந்த நிதியாண்டிலேயே மோட்டார் பொருத்திய 20 புதிய படகுகள் ஒதுக்கீடு செய்ய முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பிச்சாவரத்தின் சுற்றுலா மேம்பாட்டு திட்டத்திற்கு ரூ.55.55 இலட்சம் அனுமதித்து, உணவகம், சிற்றுண்டியகம், படகு குழாம், செயின் லிங்க், ஃபென்சிங், நிலச்சீரமைப்பு, பலர் படுக்கும் அறைகள், குடில்கள் மேம்பாடு, சோடியம் ஆவி விளக்குகள், குழந்தைகள் விளையாட்டுச் சாதனங்கள், சமையல் சாதனங்கள், சீர்வழி மின்னாக்கி, தெளிப்பு நீர் புல் தரை ஆகிய பணிகள்



தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் செய்து முடிக்கப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளது. சிதம்பரம், பிச்சாவரம் தொடர்பான சுற்றுலா விளம்பர மடிப்பேடும் சுற்றுலாத் துறையின் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. அத்துடன் C.D. Rom வலைதளம் மற்றும் தொடுதிரை கணினி மூலம் விளம்பரப்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்படும் 8 நாள் சுற்றுப்பயணத் திட்டத்தில், கடலூர் மாவட்டம் பிச்சாவரம் இடம் பெறுகிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் பிச்சாவரத்தில் குடில்கள், இளைஞர் விடுதி, உணவகம் நடத்தப்பட்டு வருகிறது. கடலூர் மாவட்டம், சிதம்பரம் மற்றும் பிச்சாவரம், தமிழக அரசால் கலை மற்றும் பாரம்பரியமிக்க நகரமாக அறிவிக்கப்பட்டு உள்ளது. கடலூர் மாவட்ட சுற்றுலா சிறப்பியல்புகளை, சுற்றுலாப் பயணிகளுக்கு எடுத்துரைக்கவும், வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளவும் சுற்றுலா அலுவலகம் சிதம்பரத்தில் இயங்கி வருகிறது.

மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பிச்சாவரத்தில் விசைப்படகு விடவேண்டுமென்கின்ற கோரிக்கையை வைத்துள்ளார்கள். அங்கேயுள்ள அரிய தாவர வகை மற்றும் கடல்வாழ் உயிரினங்களைப் பாதுகாக்கும் சுற்றுச் சுழல் கொள்கைக்கு ஏற்ப வனத் துறை மற்றும் சுற்றுச் சூழல் துறையின் அனுமதியைப் பெற்ற பின்னரே இத்திட்டத்தை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள இயலும். அதுவும் அப்பகுதியில் நீர் ஆழம் இல்லாத நிலை மற்றும் உயர் அலை மற்றும் தாழ் அலைகளுக்கு ஏற்ப கடல் நீர் உட்புகுதல் மற்றும் கடலுக்குள் ஆற்று நீர் புகுதல் போன்றவற்றால் நீரின் மட்டத்தில் மாற்றம் தொடர் நிகழ்வுகளாக உள்ளன. இது தொடர்பாக மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனையைப் பெற்று இத்திட்டம் பரிசீலனை செய்யப்பட வேண்டி உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு வெளிநாடுகளிலிருந்து, குறிப்பாக கனடா, ஜப்பான், அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகள் தினந்தோறும் இங்கு வந்து செல்கின்றனர். மேலும் ஒரு படகில் 4 நபர் மட்டுமே இப்போது பயணம் செய்வதற்கு ஏதுவாக இருக்கிறது. அதற்கு நபர் ஒருவருக்கு கட்டணமாக பெரியவர்களுக்கு 25 ரூபாயும், சிறியவர்களுக்கு 21 ரூபாயுமாக இப்போது வசூல் கட்டணமாக இருந்து

வருகிறது. பல்வேறு மாநிலங்களிலிருந்தும், குறிப்பாக தமிழக கல்விச் சுற்றுலா மாணவ, மாணவிகளுடைய அதிகரிப்பும் அதிகமாக இருந்த வண்ணம் இருக்கிறது. எனவே இந்தப் படகு சவாரி செய்ய கல்விச் சுற்றுலா வருகின்ற மாணவ, மாணவியர்களுக்கு 21 ரூபாயாக இருக்கின்ற கட்டணத்தை 10 ரூபாயாகக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11-20*

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலுள்ள சாத்தனூரில் ஒரு பெரிய வேப்பமரம் பல ஆண்டுகளுக்கு முன்னாலே கல்மரமாகி, தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் அந்த இடத்தில் வேலியைப் போட்டு வைத்திருக்கிறார்கள். அந்த மரம் இருக்கின்ற இடத்திற்கு நானும் போய்ப் பார்த்தேன். உண்மையிலேயே ஒரு பெரிய மரம் கல்லாகி அப்படியே கிடக்கிறது. அந்தக் கல்லைத் தட்டினால் ஓர் ஓசையும் வருகிறது. அந்த இடத்திற்குப் போய் அந்தக் கல்லைப் பார்க்கிற மக்களுக்கு அங்கே இட வசதி இல்லாமலும், முட்புதராகவும் இருக்கிறது. அங்கே போவதற்கே வசதி இல்லை. ஆகவே நம்முடைய வரலாற்று பொக்கிஷமாக இருக்கின்ற அந்த சாத்தனூர் பகுதியிலே உள்ள அந்தக் கல் மரத்தை மற்றவர்களும் பார்க்கிற அளவிற்கு வசதி செய்து கொடுக்கவேண்டும். தொல்பொருள் ஆராய்ச்சிப் பகுதியிலே இருக்கிற அந்த இடத்தில் ஒரு காலத்திலே மிருகங்களெல்லாம் அந்தக் கடல் பகுதியிலே வாழ்ந்ததாக வரலாற்றிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அந்த இடத்தை நம்முடைய தமிழக அரசு மேற்கொண்டு அதை ஒரு சுற்றுலா மையமாக ஆக்குவதற்கு—அந்த இடம் மத்திய அரசினுடைய தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் வசம் இருந்தாலும் மத்திய அரசிடம் நாம் கேட்டு அதை சுற்றுலா மையமாக்க—நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் முதலில் அமைச்சரையும் என்னையும் அழைத்துக்கொண்டு போய் அந்த இடத்தைக் காட்டியதற்குப் பிறகுதான் இந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. கவன ஈர்ப்பு

### கன்னியாகுமரி மாவட்டம், மணக்குடி கிராமம், கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் காணாமல் போனது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஆஸ்டின் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார். திரு. ஆஸ்டின்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் ஆழ்கடலில் மீன்பிடிக்கச் செல்லுகின்றபொழுது அவர்களின் பாதுகாப்பிற்காக 10,000 life jackets வழங்குவதற்கு ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்தும்....*(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின், வாசகங்களை மட்டும் படிக்க வேண்டும், அவ்வளவுதான்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், மணக்குடி மீனவர் கிராமத்தைச் சேர்ந்த நான்கு மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கச் சென்றபோது காணாமல் போனது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

## அறிக்கை

கன்னியாகுமரி மாவட்டம், மணக்குடி கிராமத்தைச் சேர்ந்த திருவாளர்கள் (1) ரெம்ஜியூஸ், (2) ததேயூஸ் (3) ஜான் மற்றும் (4) வின்செண்ட் ஆகியோர் 21-12-2003 அன்று வல்லத்தில் மீன்பிடிக்கச் சென்றனர். இவர்கள் மறுநாள் காலையில் கரை திரும்பியிருக்க வேண்டும். கரை திரும்பாததால், இவர்களை இந்திய கடலோரக் காவல் படை மற்றும் இந்திய கப்பல் படை ஆகியவற்றின் துணை கொண்டு 22-12-2003 மற்றும் 23-12-2003 ஆகிய நாட்களில் கடலோரக் காவல் படையின் கப்பல் மூலம் தேடியும் 24-12-2003 அன்று கடலோரக் காவல் படையின் விமானம் மூலம் தேடியும் இவர்களைப்பற்றி எந்தவிதமான தகவலும் கிடைக்கப்பெறவில்லை.

26-12-2003 அன்று மத்திய அரசின் வெளிவிவகாரத் துறை அமைச்சகம் மூலமாக இலங்கை மற்றும் மாலத்தீவுகளில் உள்ள இந்தியத் தூதரகங்கள் தொடர்புகொள்ளப்பட்டு காணாமல் போன 4 மீனவர்கள் குறித்து தகவல்கள் ஏதுமிருப்பின் சேகரித்தும் ஒருவேளை தங்களது வல்லத்தில் ஏதாவது பழுது ஏற்பட்டு சர்வதேச கடல் எல்லை தெரியாது அந்நாடுகளின் கடல் எல்லைக்குள் செல்ல நேரிட்டு அந்நாடுகளின் கடலோரக் காவல் படையினரால் கைப்பற்றப்பட்டு சிறை வைக்கப்பட்டிருந்தால் அவர்களை மீட்டு உடனே தாயகம் திருப்பி அனுப்ப தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். ஆனால் இன்று வரையிலும் இம்மீனவர்கள் குறித்த தகவல்கள் ஏதுமில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் ஆழ்கடலில் மீன் பிடிக்கச் செல்லுகின்றபொழுது அவர்களின் பாதுகாப்பிற்காக 10,000 life jackets வழங்குவதற்காக ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்தும், மீனவர்களுக்கு இந்த நிதி ஆண்டிலே 4,000 வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு ரூ.15.65 கோடி நிதி ஒதுக்கீடு செய்தும், மீனவர்களைப் பாதுகாக்கும் பாதுகாவலராக தமிழகத்தை வழிநடத்திச் செல்லுகின்ற மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு குமரி மாவட்ட மீனவர்கள் சார்பிலே முதற்கண் என்னுடைய நன்றியினைப் பணிந்து சமர்ப்பித்துக்கொள்கிறேன்.





21-12-2003 அன்று மாலை 5—30 மணிக்கு மேலமணக்குடி மீனவ கிராமத்தைச் சேர்ந்த ரெம்ஜியூஸ், ததேயூஸ், ஜான், வின்செண்ட் ஆகிய நான்கு மீனவர்களும் லம்பாடினி எஞ்ஜின் பொருத்தப்பட்ட பிளைவுட் வல்லத்தில் மீன் பிடிக்கச் சென்றவர்கள் இதுவரை கரை சேரவில்லை. அவர்கள் 22-12-2003 காலை 8 மணிக்குள்ளாக கரை திரும்பியிருக்க வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குள் அவர்கள் கரை திரும்பாததால், இந்தப் பிரச்சினை உடனடியாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய கவனத்திற்கும், மாண்புமிகு மீனவளத் துறை அமைச்சர் மற்றும் அதிகாரிகளுடைய கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டு, அரசு துரித நடவடிக்கையினை மேற்கொண்டு கடலோரக் காவல் படை வாயிலாக கப்பல் மூலமாகவும் பின்னர் விமானம் மூலமாகவும் தொடர்ந்து தேடுதல் பணி நடைபெற்றும் இதுவரை அவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

மீனவர்களின் உயிர் பாதுகாப்பிற்காக, ரோந்துப் பணிக்காகவே வாங்கப்பட்ட 'வலம்புரி' என்ற விசைப் படகு தற்போது பழுதுபட்ட நிலையிலே கன்னியாகுமரியிலே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதனைப் பழுதுபார்த்து தினமும் பயன்படுத்தும் வகையிலே உள்ளூர் மீனவர்களை அதிலே பணியமர்த்தினால் மீனவர்கள் காணாமல் போன தகவல் தெரிந்த உடனேயே இந்த விசைப் படகு மூலமாக அவர்களைத் தேடி கண்டுபிடிக்க முடியும்.

மேலும் பாதிக்கப்பட்ட இந்த 4 மீனவர்களின் வருமானத்தை நம்பித்தான் அவர்களது குடும்பம் வாழ்ந்து வந்தது... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின், கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. ஆஸ்டின்:** கடந்த 1½ மாத காலமாக இவர்களது குடும்பத்தினர் மிகவும் வறுமையிலே, வாழ்வதற்கு வழியின்றி தவித்துக் கொண்டிருக்கின்றார்கள். எனவே மீனவர்கள் அண்டை நாட்டினரால் சிறை பிடிக்கப்பட்டால், அவர்களது குடும்பங்களுக்கு நிவாரணத் தொகையாக, அரசு தினமும் 50 ரூபாய் வழங்குவதற்கு விதி இருக்கின்றது.

[திரு. ஆஸ்டின்] [2004 பிப்ரவரி 13

*முற்பகல் 11-25*

அதுபோல காணாமல்போன இந்த நான்கு மீனவர்களுடைய குடும்பத்திற்கும், இதனைச் சிறப்பு நிகழ்வாகக் கருதி, விதியினைத் தளர்த்தி, தினமும் *50* ரூபாய் நிவாரணத் தொகை வழங்கிடவும், ஏற்கெனவே, அழிக்கால் மீனவர் கிராமத்தைச் சார்ந்த *13* மீனவர்கள் காணாமல் போனபோது, இதய தெய்வம் அம்மா அவர்கள் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து, அவர்களுக்கு உதவி வழங்கி, அவர்கள் குடும்பங்களைப் பாதுகாத்ததுபோல, இதனையும் அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு பரிசீலித்து, பாதிக்கப்பட்டுள்ள நான்கு மீனவர்கள் குடும்பங்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலேயிருந்து உதவி வழங்கி, அவர்களுடைய குடும்பங்களைப் பாதுகாத்திட கேட்டு, இந்தப் பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்த உதவிகளைச் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், மணக்குடி கிராமத்தினைச் சேர்ந்த திருவாளர்கள் ரெம்ஜியூஸ், ததேயூஸ், ஜான், வின்சென்ட் ஆகிய நால்வரும், *21-12-2003* அன்று வல்லத்தில் மீன் பிடிக்கச் சென்றனர். அவர்கள் மறுநாள் காலை கரை திரும்பி இருக்க வேண்டும். கரை திரும்பாததால், அவர்களை, இந்திய கடலோரக் காவல் படை மற்றும் இந்திய கப்பல் படை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களே, அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது. அவர் கேட்ட கேள்விக்கு மட்டும் பதில் சொல்லுங்கள், போதும்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே, அழிக்கால் கிராமத்திலே பாதிக்கப்பட்ட *10* மீனவர்களுக்கு இதுபோன்ற நிவாரணத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதேபோன்று *4* மீனவர்களுடைய நிலைமையையும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும். அதோடு காணாமல்போன *4* மீனவர்களுடைய குடும்பங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய நிவாரண நிதியிலேயிருந்து தலா ரூபாய் *50* ஆயிரம் நிதி வழங்கக் கோரி, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர், தனது கடித எண் சி *3/84845/2003*, நாள் *1-2-2004*-இன்மூலம், சென்னை சிறப்பு வருவாய் நிர்வாக ஆணையருக்குப் பரிந்துரை செய்துள்ளார். அம்மா அவர்களுடைய அரசு இதைக் கனிவோடு பரிசீலிக்கும். மீன் துறை மூலமாக வழங்கப்படும் நிவாரணத்தைப் பொறுத்தவரையில், காணாமல் போன *4* மீனவர்களில், *3* மீனவர் குடும்பங்களுக்கு தேசிய மீனவர் கூட்டுறவுச் சம்மேளனம், புதுடில்லி மூலம் வழங்கப்படவுள்ள தலா ரூபாய் *50* ஆயிரத்தைப் பெற்றுத்தர தனியே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதில் ததேயூஸ் என்பவர் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக இல்லாததால், தேசிய மீனவர் கூட்டுறவுச் சம்மேளனத்தின் நிதியுதவியைப் பெறத் தகுதியில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2004 பிப்ரவரி 13] [திரு. எம். ராதாகிருஷ்ணன்]

## 3. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே.என். இலட்சுமணன்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் *2003-2004* ஆம் ஆண்டிற்கான, பொதுக் கணக்குக் குழுவின் நூற்றுத் தொண்ணூற்று ஆறு முதல் இருநூற்று நான்கு வரையிலான ஒன்பது அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். முனைவர் மு. தம்பிதுரை.

**டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் *2003-2004* ஆம் ஆண்டிற்கான, பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று நாற்பத்திரண்டு மற்றும் நூற்று நாற்பத்து மூன்று ஆகிய இரண்டு அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (இ) அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அளித்தல். திரு. லா. சந்தானம்.

[2004 பிப்ரவரி 13

**திரு. லா. சந்தானம்** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003-2004 ஆம் ஆண்டிற்கான, அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்து மூன்றாவது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புத் திருத்தச் சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புத் திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புத் திருத்தச் சட்டமுன்வடிவுவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.



2004 பிப்ரவரி 13]

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 2003-2004, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003-2004 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்கள் குறித்த இறுதித் துணை நிதிநிலை அறிக்கை. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-30

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன்வைக்க விழைகின்றேன். ரூபாய் 3159.72 கோடிக்கான மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இதில், ரூபாய் 1261.35 கோடி வருவாய்க் கணக்கிலும், எஞ்சிய தொகையான ரூபாய் 1898.37 கோடி மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும். இந்த மானியக் கோரிக்கைகளில் இடம் பெறுகின்ற சில முக்கியமான திட்டப் பணிகள் குறித்து நான் சுருக்கமாகக் கூற விழைகின்றேன்.

2. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூகத்தைச் சேர்ந்த மக்களுக்கு அதிகாரமளிப்பதற்கு அந்தச் சமூகத்தைச் சேர்ந்தோருக்குத் தரமான கல்வி வசதி செய்துகொடுப்பது தலையாயதாகும். இந்தச் சமூகத்தைச் சேர்ந்த மாணவர் தங்குவதற்கான மாணவரில்லங்கள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின்கீழ் "மானியக் கோரிக்கை எண் 4 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை" என்பதன்கீழ் கூடுதலாக ரூ.6.94 கோடி நிதியொதுக்கம் தேவைப்படுகிறது.

3. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகிய சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகைகளும், பயிற்சி உதவித் தொகைகளும் வழங்குவதற்கு ரூபாய் 29.19 கோடி கூடுதலாகத் தேவைப்படுகிறது. மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீரமரபினர் சமூகங்களைச் சேர்ந்த ஊரக மாணவியர்களுக்கு ஊக்குவிப்புத் தொகை வழங்குவதற்கு ரூபாய் 9 கோடி கூடுதலாகத் தேவைப்படுகிறது. இவற்றிற்கான தொகைகள் "கோரிக்கை

எண் 9—பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை" என்பதன்கீழ் கோரப்பட்டுள்ளன.

4. அத்தியாவசியப் பொருட்கள் வாங்குவதற்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு வழிவகை முன்பணம் வழங்குவதற்கு ரூபாய் 200 கோடி தேவைப்படுகிறது. "கோரிக்கை எண் 12—கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை" என்பதன்கீழ் இது சேர்க்கப்பட்டுள்ளது.

5. "கோரிக்கை எண் 12—கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை" என்பதன்கீழ், கூட்டுறவு வங்கிகளிடமிருந்து சிறு மற்றும் குறு விவசாயிகள் பெற்றுள்ள பயிர்க் கடன்கள் மீதான வட்டியைத் தள்ளுபடி செய்யும் திட்டத்திற்கு ரூபாய் 41.05 கோடி கூடுதல் நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது.

6. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குப் பங்குத் தொகை உதவி அளிப்பதற்கு ரூபாய் 175 கோடி கூடுதல் நிதியொதுக்கம் தேவைப்படுகிறது. இது "கோரிக்கை எண் 13—எரிசக்தித் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

7. கூடுதலாக 30 இலட்சம் பாலிகாட் சேலைகள் மற்றும் 37 இலட்சம் வேட்டிகள் வாங்குவதற்காக "கோரிக்கை எண் 16—கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணிநூல்" என்பதன்கீழ் ரூபாய் 53 கோடி கூடுதல் நிதியொதுக்கம் தேவைப்படுகிறது. துணை மதிப்பீடுகளில் ரூபாய் 34.42 கோடி சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தற்போது ஒட்டுமொத்த சமூகப் பாதுகாப்பு வளையத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக ஆகியுள்ளது. இத்திட்டம் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிப்பதோடல்லாமல், 1.11 கோடி பெண் பயனீட்டாளர்களையும், 1.11 கோடி ஆண் பயனீட்டாளர்களையும், மொத்தம் 2.22 கோடி பயனீட்டாளர்களைக் கொண்டதாக அமைந்துள்ளது.

8. சென்னை மாநகருக்கான குடிநீர் பற்றாக்குறையைச் சமாளிக்கத் தேவையான பணிகளைச் செயல்படுத்துவதற்காக



சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திற்கு (CMWSSB) வழி வகை முன்பணம் வழங்குவதற்கு ரூபாய் 150 கோடி ஒதுக்கீடு தேவைப்படுகிறது. மாநிலத்தில் குடிநீர் வழங்கும் பணிகளைச் செயல்படுத்துவதற்குத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு (TWAD) வழிவகை முன்பணம் வழங்குவதற்கு ரூபாய் 100 கோடி ஒதுக்கீடு தேவைப்படுகிறது. இந்த நோக்கத்திற்காக "மானியக் கோரிக்கை எண் 33—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை" என்பதன்கீழ் மொத்தம் ரூபாய் 206.85 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

9. 5860 கி.மீ. நீளமுள்ள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளில் நிலை உயர்த்துதல், சீரமைத்தல் மற்றும் சிறப்பு பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு ரூபாய் 300 கோடி மொத்தச் செலவில் மிகப் பெரிய திட்டமொன்றிற்கு இந்த அரசு ஏற்பளித்துள்ளது. நடப்பு நிதியாண்டில் ரூபாய் 125 கோடி செலவிடப்படக்கூடும். "கோரிக்கை எண் 40—ஊரக வளர்ச்சித் துறை" என்பதன்கீழ் ரூபாய் 75.45 கோடி கூடுதல் நிதியொதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது.

10. மாநில அளவில் தரமான கல்வி கிடைக்கச் செய்வதை மேம்படுத்தும் வகையில் பள்ளிக் கட்டடங்கள் மற்றும் பிற கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு ரூபாய் 37.14 கோடி கோரப்படுகிறது. இது "கோரிக்கை எண் 41—பள்ளிக் கல்வித் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

11. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை, இம்மாமன்றம் ஏற்று, இசைவளிக்க வேண்டுகிறேன்.

## 2003-2004 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

(ரூபாய் ஆயிரத்தில்)

| கோரிக்கை (Demand) | வருவாய் (Revenue) | மூலதனம் (Capital) | கடன் (Loan) |
|---|---|---|---|
| 1. மாநில சட்டமன்றம் | 3 | - | - |
| 2. ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 60,36 | - | - |
| 3. நீதி நிருவாகம் | 10 | - | - |
| 4. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 35 | 6,93,77 | - |
| 5 வேளாண்மைத் துறை | 56,27,24 | 42,11 | - |
| 6. கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை-கால்நடை பராமரிப்பு | 24 | - | - |
| 7. கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை—மீன்வளம் | 16,72,30 | - | 4,31,48 |
| 9. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 45,53,57 | 4,98 | .. |
| 10. வணிக வரித் துறை—வணிக வரிகள் | 8 | - | - |
| 11. வணிக வரித் துறை—முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு | 6,33,86 | - | - |
| 12 கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | 239,53,60 | 44,64 | 219,92,39 |



| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 13. எரிசக்தித் துறை | 3 | 175,00,00 | - |
| 14. சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை | 17,48,21 | 10 | - |
| 15. நிதித் துறை | 61,02,01 | - | - |
| 16. கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணிநூல் | 34,41,62 | - | - |
| 17. கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் | 3 | - | - |
| 18. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை | 1,15 | 3 | - |
| 19. உயர் கல்வித் துறை | 30 | 15,89 | - |
| 20. நெடுஞ்சாலைகள் துறை | 65,51,71 | 434,88,56 | 56,37 |
| 21. உள் துறை-காவல் | 90 | 1 | - |
| 22. உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் | 6 | 1,35,46 | - |
| 23. உள் துறை—சிறைச்சாலைகள் | 67,97 | 11,25,65 | - |
| 24. உள் துறை-இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் | 4 | - | - |
| 25. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 1,79,60 | 1 | - |
| 26. தொழில் துறை | 4 | 760,99,99 | 14,43,00 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 27. செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-செய்தி மற்றும் விளம்பரம் | 5 | 1,28 | 3,51,00 |
| 28. செய்தி மற்றும் சுற்றுலாத் துறை- சுற்றுலா | 12 | 65,38 | - |
| 29. செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—எழுதுபொருள் மற்றும் அச்சு | 2 | - | - |
| 30. தகவல் தொழில் நுட்பவியல் துறை | 2 | - | - |
| 31 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 19 | 2,04,26 | .. |
| 33. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 11 | 2 | 212,48,62 |
| 34. பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை | 6 | - | - |
| 35. திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 7 | 2 | - |
| 36 மதுவிலக்கு மற்றும ஆயத் தீர்வைத் துறை | 1,54,86 | 6,40,00 | - |
| 37. பொதுத் துறை | 29 | - | - |
| 38 பொதுப் பணித் துறை | 162,29,81 | 62 | - |
| 39 வருவாய்த் துறை | 45 | - | - |
| 40. ஊரக வளர்ச்சித் துறை | 75,45,11 | 1 | - |
| 41. பள்ளிக் கல்வித் துறை | 20 | 37,14,00 | |
| 42. சிறுதொழில்கள் துறை | 6 | 1 | |



| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 43. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 31,10,02 | 4,14,90 | - |
| 44. தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—தமிழ வளர்ச்சி-பண்பாடு | 14 | - | - |
| 45. தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை | 3 | 46,40 | |
| 46. போக்குவரத்துத் துறை | 30,36,32 | - | |
| 47. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 7 | 76,00 | |
| 48. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக் கால நன்மைகளும் | 12 | - | [illegible] |
| 49. இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 395,40,40 | [illegible] | - |
| பெரு மொத்தம் | 1,242.13,92 | [illegible] | [illegible] |

D
V211,31 P04
P06. 57.3
தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் 226058 சென்னை-600 008

(முற்பகல் 11-35

## 6. அறிவிப்புகள்

### (அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2003-2004, மொழிதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2003-2004 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause 2 of Article 205 read with Clause 3 of Article 203 of the Constitution of India, I, P.S. Ramamohan Rao, Governor of Tamilnadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the demands for further grants for the Financial Year 2003-2004."

## 7. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2003-2004, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003-2004 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவினங்கள் குறித்த மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003-2004 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 13-2-2004 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள இறுதித் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 2003-2004 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.



### நிறைவேற்றப்பெற்ற 2003-2004 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

(ரூபாய் ஆயிரத்தில்)

| | கோரிக்கை (Demand) | வருவாய் (Revenue) | மூலதனம் (Capital) | கடன் (Loan) |
|---|---|---|---|---|
| 1. | மாநில சட்டமன்றம் | 3 | - | - |
| 2. | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 60,36 | - | - |
| 3. | நீதி நிருவாகம் | 10 | - | - |
| 4. | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை | 35 | 6,93,77 | - |
| 5. | வேளாண்மைத் துறை | 56 27,24 | 42,11 | - |
| 6. | கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை-கால்நடை பராமரிப்பு | 24 | - | - |
| 7. | கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை-மீன்வளம் | 16,72,30 | - | 4,31,48 |
| 9. | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 45,53,57 | 4,98 | .. |
| 10. | வணிக வரித் துறை-வணிக வரிகள் | 8 | - | - |
| 11. | வணிக வரித் துறை-முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு | 6,23,86 | - | - |
| 12. | கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | 239,53,60 | 44,64 | 219,9[illegible] |
| 13. | எரிசக்தித் துறை | 3 | 175,00,00 | - |
| 14. | சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை | 17,43,21 | 10 | |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 15. **நிதித் துறை** | 61,02,01 | - | - |
| 16. **கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை-கைத்தறி மற்றும் துணிநூல்** | 34,41,62 | - | - |
| 17. **கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள்** | 3 | - | - |
| 18. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை | 1,15 | 3 | - |
| 19. உயர் கல்வித் துறை | 30 | 15,89 | - |
| 20. நெடுஞ்சாலைகள் துறை | 65,51,71 | 434,88,56 | 56,37 |
| 21. உள் துறை-காவல் | 90 | 1 | - |
| 22. உள் துறை-தீயணைப்பு மற்றும மீட்புப் பணிகள் | 6 | 1,35,46 | - |
| 23. உள் துறை-சிறைச்சாலைகள் | 67,97 | 11,25,65 | - |
| 24. உள் துறை-இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் | 4 | - | - |
| 25. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 1,79,60 | 1 | - |
| 26. தொழில் துறை | 4 | 760,99,99 | 14,43,00 |
| 27. செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-செய்தி மற்றும் விளம்பரம் | 5 | 1,28 | 3,51,00 |
| 28. செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-சுற்றுலா | 12 | 65,38 | - |



| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 29. செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-எழுதுபொருள் மற்றும் அச்சு | 2 | - | - |
| 30. தகவல் தொழில்நுட்பவியல் துறை | 2 | - | - |
| 31. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 19 | 2,04,26 | - |
| 33. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 11 | 2 | 212,48,62 |
| 34. பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை | 6 | - | - |
| 35. திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 7 | 2 | - |
| 36. **மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை** | 1,54,86 | 6,40,00 | - |
| 37. **பொதுத் துறை** | 29 | - | - |
| 38. **பொதுப் பணித் துறை** | 162,29,81 | 62 | - |
| 39. **வருவாய்த் துறை** | 45 | - | - |
| 40. **ஊரக வளர்ச்சித் துறை** | 75,45,11 | 1 | - |
| 41. **பள்ளிக் கல்வித் துறை** | 20 | 37,14,00 | |
| 42. **சிறுதொழில்கள் துறை** | 6 | 1 | |
| 43. **சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை** | 31,10,02 | 4,11,90 | - |
| 44. **தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு** | 14 | - | - |
| 45. **தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை** | 3 | 46,40 | - |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 46. போக்குவரத்துத் துறை | 30,36,32 | - | - |
| 47. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 7 | 76,00 | .. |
| 48. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக் கால நன்மைகளும் | 12 | - | - |
| 49. இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 395,40,40 | - | - |
| பெரு மொத்தம் | 1,242,13,92 | 1,443,14,10 | 4,55,22,86 |

## 6. அறிவிப்புகள்-தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2004 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வு செய்யவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள்-(அறிமுகம் செய்தல்)-தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.



***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறே

## 8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள்—ஆய்வு செய்தல். 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2004). மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்கள்.

[2004 பிப்ரவரி 13

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2004) ஆய்வுக்கு@ எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆயவுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, பிரிவு 3 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, பிரிவு 3 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@12-2-2004 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



2004 பிப்ரவரி 13] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2004) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 9. அரசினர் தீர்மானங்கள்

### (அ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு

[திரு. சி. பொன்னையன்] [2004 பிப்ரவரி 13

(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2004) மற்றும் 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புத் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2004) ஆகியவை இன்றே ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

முற்பகல் 11-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## 8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)-தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல். 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2004). மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2004) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2004 பிப்ரவரி 13] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1. முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2004) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

[2004 பிப்ரவரி 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(இ) தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புத் திருத்தச் சட்டமுன்வடிவு, 2004**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புத் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2004), மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புத் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2004) ஆய்வுக்கு@ எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

---

@ 13-2-2004 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



2004 பிப்ரவரி 13] [பேரவைத் தலைவர்]

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புத் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2004) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஈ) குற்ற வழக்கு விசாரணை முறை (தமிழ்நாடு இரண்டாம் திருத்தத்) தொகுப்புச் சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2002 ஆம் ஆண்டு குற்ற வழக்கு விசாரணை முறை (தமிழ்நாடு இரண்டாம் திருத்தத்) தொகுப்புச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2002), மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு குற்ற வழக்கு விசாரணை முறை (தமிழ்நாடு இரண்டாம் திருத்தத்) தொகுப்புச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2002) மற்றும் ஆளுநர் அவர்கள் அச்சட்டமுன்வடிவு குறித்து மறுஆய்வு செய்வதற்காக அனுப்பிய செய்தி ஆகியவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)



ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு குற்ற வழக்கு விசாரணை முறை (தமிழ்நாடு இரண்டாம் திருத்தத்) தொகுப்புச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2002) திரும்பப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு திரும்பப்பெறப்பட்டது.

### (உ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2003), மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.*

**முற்பகல் 11-45**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. செ.ம. வேலுசாமி] [2004 பிப்ரவரி 13

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2003) ஆய்வுக்கு@ எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம்.

**பிரிவு 1**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

@7-11-2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



2004 பிப்ரவரி 13] [திரு. செ.ம. வேலுசாமி]

"In clause 1, in sub-clause (1), for the expression '(Third Amendment) Act 2003' substitute the expression '(Amendment) Act, 2004'."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது.

பிரிவு 1 திருத்தப்பெற்றபடி, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

முகப்புரை, மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம்.

**முகப்புரை**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"In the preamble for the expression 'Fifty-fourth', substitute the expression 'Fifty-fifth'."

[2004 பிப்ரவரி 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது.

முகப்புரை, திருத்தப்பெற்றபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

நெடுந்தலைப்பு, திருத்தங்கள் இல்லை.

நெடுந்தலைப்பு சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2004 பிப்ரவரி 13] [திரு. செ.ம. வேலுசாமி]

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2003) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு, திருத்தப்பெற்றபடி ஏற்கப்பட்டது.

### (ஊ) தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருட்களைக் கொண்டு வருவதன் மீதான வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருட்களைக் கொண்டு வருவதன் மீதான வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/2003). மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருட்களைக் கொண்டு வருவதன் மீதான வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/2003) ஆய்வுக்கு@ எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

---

@ 7-11-2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[2004 பிப்ரவரி 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம்.

### பிரிவு 1

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"In clause 1, in sub-clause (1), for the expression '(Second Amendment) Act, 2003' substitute the expression '(Amendment) Act 2004'."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2004 பிப்ரவரி 13] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது.

பிரிவு 1 திருத்தப்பெற்றபடி, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

முகப்புரை, மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம்.

### முகப்புரை

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"In the preamble for the expression 'Fifty-fourth', substitute the expression 'Fifty-fifth'."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது.

முகப்புரை, திருத்தப்பெற்றபடி, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

நெடுந்தலைப்பு, திருத்தங்கள் இல்லை.

நெடுந்தலைப்பு சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-50

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருட்களைக் கொண்டு வருவதன் மீதான வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/2003) திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு திருத்தப்பெற்றபடி, ஏற்கப்பட்டது.

## 9. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை மீண்டும் கூடும் நாள். குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25(1)-ன் படி பேரவை மீண்டும் கூடும் நாள், குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

இந்தச் சட்டப் பேரவையின் கூட்ட நிகழ்ச்சிகளிலே கலந்து கொண்ட அனைவருக்கும், விவாதங்களிலே பங்குபெற்ற அனைவருக்கும் என்னுடைய பாராட்டுக்களை, வணக்கங்களை, வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [2004 பிப்ரவரி 13

ஆளுநர் உரைக்கு நன்றிகூறும் தீர்மானத்தின்மீது நடைபெற்ற விவாதங்களுக்குப் பதிலுரை வழங்குகிறபோது, தாய்மை நலம் கனிந்த பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்ட மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) தமிழகத்தினுடைய முன்னேற்றத்தை முடுக்கிவிடக் கூடிய ஓர் அற்புதமான வரவு-செலவுத் திட்டத்தை வழங்கியமைக்காக அரசுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய வணக்கங்கள் 'சென்று வருக; வென்று வருக' (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுகிறது. வணக்கம், நன்றி.

பின்னர், பேரவை முற்பகல் 11-51 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*49. 2002-2003* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் இருபத்தி ஒன்பதாவது ஆண்டறிக்கை [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*-A பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

*50. 2002-2003* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வெடிமருந்துகள் நிறுவனத்தின் இருபதாவது ஆண்டறிக்கை [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*-A பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

*51. 2002-2003* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மூலிகை மருந்துப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தின் இருபதாவது ஆண்டறிக்கை [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*-A பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)



2004 பிப்ரவரி 13]

*52. 2002-2003* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்தி ஒன்றாவது ஆண்டறிக்கை [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*-A பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*58. 2004-2005* ஆம் ஆண்டில் உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி. (தமிழ், ஆங்கிலம்)

*59. 2004-2005* ஆம் ஆண்டு "உடனடிச் செலவுக்கான" மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

*60. 2003-2004* ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ், ஆங்கிலம்)

*61. 2003-2004* ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

*62. 2003-2004* ஆம் ஆண்டின் இறுதித் துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவுத் துறை அமைச்சர் அவர்கள் உரை. (தமிழ், ஆங்கிலம்)

*63.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்று தொண்ணூற்று ஆறாவது அறிக்கை. *(2003-2004)*

*64.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்று தொண்ணூற்று ஏழாவது அறிக்கை. *(2003-2004)*

*65.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்று தொண்ணூற்று எட்டாவது அறிக்கை *(2003-2004)*

*66.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்று தொண்ணூற்று ஒன்பதாவது அறிக்கை. *(2003-2004)*

*67.* பொதுக் கணக்குக் குழுவின் இருநூறாவது அறிக்கை. *(2003-2004)*

*68.* பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று ஒன்றாவது அறிக்கை. *(2003-2004)*

*69.* பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று இரண்டாவது அறிக்கை. *(2003-2004)*

[2004 பிப்ரவரி 13

*70.* பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று மூன்றாவது அறிக்கை. *(2003-2004)*

*71.* பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று நான்காவது அறிக்கை. *(2003-2004)*

*72.* பொது நிறுவனங்கள் குழுவின் நூற்றி நாற்பத்தி இரண்டாவது அறிக்கை. *(2003-2004)*

*73.* பொது நிறுவனங்கள் குழுவின் நூற்றி நாற்பத்தி மூன்றாவது அறிக்கை. *(2003-2004)*

*74.* அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்தி மூன்றாவது அறிக்கை. *(2003-2004)*

---

D
V211,31'P04
P04.57.3
226058
சென்னை-600 008

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
112, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.

53-450